
# திருக்கோயில்



அக்டோபர்
2000

விலை
ரூபாய் ஐந்து



திருச்சி அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா 11.9.2000 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களும், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திருமிகு கா.நா. நேரு அவர்களும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



# திருக்கோயில்




திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| | | |
|---|---|---|
| மாலை 42 | திருவள்ளுவர் ஆண்டு 2031 விக்ரம ஆண்டு ஐப்பசி அக்டோபர் 2000 | மணி 10 |



சிறப்பாசிரியர்

திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.
ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

*திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி*

## பொருளடக்கம்


கைமிருப்பு
- ச. சாவர்க்கர் இ.ஆ.ப., ஆணையாளர்

நவராத்திரி உணர்த்தும் தத்துவப் பொருள்
- முனைவர் த. அமிர்தலிங்கம்

வாசகர் எண்ணங்கள்

பட்சணம் எனக்கொள் ஒரு விக்கின சமர்த்தன்
- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

சரஸ்வதி பூசை - டாக்டர் டி. செல்வராஜ்

பிரமரியம்மன் சரிதம் - திருமதி மீனாட்சி கோகுலவாசன்

பழநி மலையைச் சாரேனோ
சாமி அழகைப் பாரேனோ
- டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்

கந்தர் சஷ்டி விரதம் - ஆ. சண்முகம், பி.ஏ., பி.எல்.

அடியார்கள் கண்ட முருகன்
- கலைமாமணி அருளரசு மாசிலாமணி

துச்சாள செய்திடினும் பொறுப்பர் அன்றே
- செல்வி சுப்புலட்சுமி

விளாவும் விளக்கமும்
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

காலத்தை வென்று வாழும் சிறுத்தொண்டர்
- டாக்டர் கா.பெ. சந்திரசேகரன்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:
உயர்திரு ஆணையாளர் அவர்கள்

*திருக்கோயில்*

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை


*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி: *8279407*

# கையிருப்பு

**ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,**

ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.



1. கேட்க நினைத்ததைக் கேட்காமலே கொடுத்தார்
கிடைத்த உடனே கிடைக்காததை எண்ணினேன்
எண்ணியது எண்ணியபடி அப்படியே கொடுத்தார்
என்றாலும் இன்னும் கேட்கவே நினைத்தேன்.

2. நினைத்தது நிறையவே கிடைக்கப்பெற்றேன்
நிறைவில்லை மனதிற்கு என்று நினைத்தேன்
பெற்றது சிறிது என்று எண்ணினேன்
பெறாததே பெரிது என்று நம்பினேன்.

3. இன்னும் கேட்டேன் மேலும் கொடுத்தார்
பொன்னும் கேட்டேன் நன்றே தந்தார்
ஏன் கொடுக்கிறார் என்று நினைக்கவில்லை
என் தகுதி எனக்குத் தெரியவில்லை.

4. ஆரம்ப இருப்பு இருந்ததென்று அறியவில்லை
ஆரம்பித்த பிறகு குறைந்தது தெரியவில்லை
குறையக் குறைய எண்ணியது கிட்டவில்லை
குறையை நிவர்த்திக்கும் எண்ணம் எட்டவில்லை.

5. கையிருப்பு தீர்ந்ததைத் தெரிந்து கொண்டேன்
கடின காலம் நெருங்குவது கண்டேன்
மீளுவதற்கான உபாயம் சொல்லக் கேட்டேன்
மீண்டும் பின்னுக்குச் செல்லவே மாட்டேன்

# நவராத்திரி உணர்த்தும் தத்துவப்பொருள்

- முனைவர் த. அமிர்தலிங்கம்

முன்னுரை

இந்து சமயம் போற்றும் திருவிழாக்களில் புரட்டாசி மாதம் வளர்பிறையில் ஆதிபராசக்தியைப் போற்றிக் கொண்டாடப்படும் நவராத்திரி விழா ஒப்பற்ற ஒரு விழாவாகும். புரட்டாசி மாத மகாளய அமாவாசையன்று நவராத்திரி விழா ஆரம்பமாகிறது. ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்கள் மகாலட்சுமியையும், இறுதி மூன்று நாட்கள் சரஸ்வதியையும் மக்கள் வழிபட்டுப் போற்றுவர். பத்தாவது விஜய தசமி நன்னாளில் இம்மூன்று தெய்வங்களையும் படைத்த பராசக்தியைப் போற்றி வழிபாடுகள் செய்வது பண்டுதொட்டு நிகழ்ந்துவரும் வழக்கமாகும்.

உடல்நலம், செல்வம், கல்வி

சுவரை வைத்துச் சித்திரம் வரைவது போல, உடலை வைத்தே இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் ஆகும். தீர்க்க ஆயுளும் நோயற்ற வாழ்வும் அருளுபவள் அன்னை துர்க்கை.

''அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு''

என்பது திருக்குறள். பொருள் இல்லாவிடில் இவ்வுலக வாழ்வு சிறக்காது.

''கல்லானே யானாலும் கைப்பொருளொன்
றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர் இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த
தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்''

என்ற பழம்பாடலும் பொருள் இல்லாத வறியவனை அவனை ஈன்ற தாயும்கூட விரும்பமாட்டாள் என்று கூறிப்பொருளை ஒவ்வொருவரும் தேடிக் கொள்ளவேண்டும் என்று உணர்த்திடக் காண்கிறோம். அத்தகைய பொருளை அருளும் தெய்வம் மகாலட்சுமி.

பொருட்செல்வத்தைவிடவும் போற்றப்படுவது கல்விச் செல்வம் ஆகும்.

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை''.

என்பது திருக்குறள். இவ்வையகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் கண்போன்றது கல்விச்செல்வம். கல்வி அற்றோர் வாழ்க்கை சிறப்பினைப் பெறாது.

''கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்''

என்கிறார் திருவள்ளுவர். இத்தகைய கல்வியைத் தரும் தெய்வம் சரஸ்வதி.

உடல்நலம், பொருட்செல்வம், கல்விச் செல்வம் இம்மூன்றும் மாந்தர் வாழ்விற்கு இன்றியமையாத தேவையாகும். இம்மூன்றையும் அருளும் தெய்வச் சக்திகளான துர்க்கை, மகாலட்சுமி, சரஸ்வதி ஆகிய முத்தேவியரை வழிபடும் ஒப்பற்ற விழாவாகத்தான் நவராத்திரி விழா சிறப்புறக் கொண்டாடப்படுகிறது.


''தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும்தரும் நெஞ்சில்
வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர்
என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே''

என்ற அபிராமி அந்தாதிப் பாடல் தனம், கல்வி, தளர்வறியா மனம் (உடல்நலம்) என அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் அன்னையே வழங்குவாள் என்று போற்றி உரைத்தல் ஈண்டு உணரத்தக்கது.

பராசக்தியின் பெருமை

நவராத்திரி விழா போற்றும் ஒப்பற்ற ஒரு பரம்பொருள்

மகிடன் என்ற எருமைத்தலையுடன் கூடிய அரக்கன், சிவபெருமான், திருமால், பிரம்மா முதலிய முத்தேவர்களாலும்கூட வெல்லமுடியாத மகாவலிமை வாய்ந்தவனாக இருந்தான் என்றும், முத்தேவர்களின் முறையீடுகேட்டு ஆதிபராசக்தி சிம்மவாகனத்தில் எழுந்தருளி மகிசனுடன் போரிட்டு அவனைச்



சம்காரம் செய்தாள் என்றும் தேவி பாகவதம் கூறும் புராண வரலாறு இங்கு நுணுகி ஆராயத்தக்கது.

''அரணம் பொருள் என்று அருள்ஒன்றில்லாத
அசுரர் தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும்
முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த
வையகத்தே''

என்று அபிராமி பட்டரும் சிவபெருமானும் திருமாலும் வேண்டிச் சரணமிட்டு முறையிட பராசக்தி தோன்றினள் என்று பாடியிருக்கக் காண்கிறோம்.

உலகம் அனைத்தையும் ஒப்பற்ற ஒரு பரம் பொருளே படைத்துக் காத்து, அழித்து எல்லையில்லா அருள்விளையாட்டினை நடத்திவருகின்றது என்பது கண்கூடு. அப்பரம்பொருளையே பராசக்தி என்பதாக இந்நவராத்திரி விழாவின்போது போற்றி வழிபாடு செய்கிறோம். சைவரும் வைணவரும் மற்ற மற்ற சமயத்தவரும், ஏன் கடவுளே இல்லை என்னும் நாத்திகரும்கூட அண்டங்களை ஆளுகைசெய்யும் ஒப்பற்ற ஒரு சக்தி - பராசக்தி பெயர்களுக்கு அப்பாற்பட்டது. பெயர்களைக் கூறி வழிபடும் போது தானே என் தெய்வம் பெரியது. உன் தெய்வம் சிறியது என்ற வேற்றுமை உணர்வு உண்டாகிறது. அவ்வாறு பெயர்களைக் கூறி வழிபடும்போது வேற்றுமையாவும் மறைந்து 'ஒன்று பரம்பொருள், நாம் அதன் மக்கள்' எனும் தெளிவு உண்டாகிறது. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலர் கருத்தும், 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு' என்ற பட்டினத்தார் வாக்கும் ஏற்றம் பெறுவது இந்நவராத்திரி விழாவினால் தான் என்பது இப்போது தெளிவாகிறது அல்லவா?

தமிழ் மூதாட்டி ஔவையாரும்
''புண்ணியம் ஆம் பாவம்போம் போனநாள்
செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் -
எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத்தார் சொல்லும்
தீதொழிய நன்மை செயல்''

என்று சமய ஒற்றுமையை வற்புறுத்திப் பாடியிருக்கிறார் அல்லவா? அத்தகைய சமய ஒற்றுமை உணர்வையே நவராத்திரி விழாவும் நமக்கு உண்டாக்குகின்றது. அதனால்தான் இந்து சமயத்தின் பெரும் பிரிவினராக விளங்கும் சைவ சமயத்திலும், வைணவ

சமயத்திலும் இப்பெருவிழா பெருமையுடன் கொண்டாடப்படுகிறது.

### நவராத்திரி கொலு

இந்நவராத்திரி விழாவின் சிறப்பு அம்சம் இல்லங்களில் வைக்கப்படும் கொலுவாகும். தெய்வங்கள், தெய்வங்களால் படைக்கப்பட்ட உயிரினங்கள், மனிதரால் படைக்கப்பட்ட விஞ்ஞானப் புதுமைகள் என யாவும் மண் பொம்மைகளாக - கொலுவாக அலங்கரிப்பதைக் காணுகின்றோம். பற்பல தெய்வங்களை ஒரு சேரக் காணும்போது, முன்னமே கூறியதுபோல், 'ஒன்று பரம்பொருள்' என்ற சமய ஒற்றுமை உணர்வு வலுப்பெறுகிறது. மேலும் ஒன்றாகிய பரம்பொருளால் ஆட்டுவிக்கப்படும் பொம்மைகளே உயிர்களாகிய நாம் என்ற உண்மையையும் இந்த நவராத்திரி கொலு நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

வீட்டையும், வீட்டின் சுற்றுப்புறத்தையும் துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற சுகாதார உணர்வையும் நவராத்திரி கொலு வைப்பதனால் நாம் பெறுகிறோம். மேலும் மனிதர்களின் நல்ல கூட்டுறவிற்கு இந்நவராத்திரி கொலு பெரிதும் பயன்படுவதும் எண்ணி மகிழத்தக்கது. அண்டை அயலாருடன் நட்புறவுடன் வாழ்ந்து மதித்திடும் வகையில் 'கொலு காணவாரீர்'' என ஒருவரையொருவர் வரவேற்று உபசரிக்கும் விருந்து உபசாரமும் இவ்விழாவின்போது சிறந்து விளங்கிடக் காணுகிறோம். ஆகவே 'கூடிவாழ்ந்தால் கோடிநன்மை' என்ற பழமொழிக்கிணங்க நல்ல நட்புறவை நவராத்திரி விழாவும், நவராத்திரி கொலுக்களும் ஏற்படுத்தி வளர்க்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### பெண்ணின் பெருமை போற்றும் விழா

''பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா!'' என்றார் மகாகவி பாரதி. நாடுபோற்றும் இந்நவராத்திரி விழா பெண்ணினத்தின் பெருமைபோற்றும் விழா என்பது இங்கு எண்ணி மகிழத்தக்கது.

இறைவனைப் 'பால் நினைந்தூட்டும் தாய்' என்று போற்றிடுவார் மாணிக்கவாசகர். இறைவனுடைய அருள் உணர்வையே 'சக்தி' என்று சைவசித்தாந்திகள் போற்றுகின்றனர்.

''அருளது சக்தி யாகும் அரன்தனக்கு
அருளையின்றேல் தெருளுறுசிவமில்லை''

என்ற கருத்தைக்காண்க. ஆணாக, பெண்ணாக காணும் யாவுமாக நின்றருள் பாலிப்பது இறைசக்தி. இறைவனை ஆண் என்று கருதும்போதும், அவன் சுரக்கும் இன்னருளைப் பெண்மையாகப் போற்றுவது நம் சமயம். அன்பும், அருளும், கருணையும் ஆண்களைவிடப் பெண்களுக்கே அதிகம் என்பதால் ஆண் தெய்வங்களைவிடவும் பெண் அம்பிகைகளை வழிபட்டாலே அதிகப் பலனைப் பெறமுடியும் என்றும் கூறுவர். 'அம்பிகையைச் சரண் அடைந்தால் அதிக வரம்பெறலாம்' என்றல்லவா மகாகவி பாரதியாரும் போற்றியிருக்கிறார்.

அம்பிகை, தம்மை வழிபடும் பக்தருக்கு வாரி வழங்கி வான்கருணை செய்வதனால் அம்பிகையின் பக்தர்கள் பிறரிடம் போய்குறை இரக்க வேண்டுவதில்லையாம்.

''இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால் சென்று
இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம்
நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள்
சேர்மின்களே'' (அபிராமி அந்தாதி)

இன்னும் அம்பிகையின் பக்தர் இன்னார் என்பதை மிக எளிதாக அடையாளம் காணும்வகையில் அவர்கள் வீடுவாசல் நிலபுலம்மிக்கவராகவும், சமுதாயத்தில் பட்டம் பதவிகள் வாய்க்கப் பெற்றவராகவும், வண்டிவாகன வசதிகள், பணியாட்கள் கொண்டவராகவும் விளங்கும் தன்மையில் இருந்தே அவர் அம்பிகையின் பக்தர் என்பதை எளிதில் தெளிந்து கொள்ளலாம் என்றும் அம்பிகையின் அருள்திறத்தைப் போற்றும் பாடல் பின்வருமாறு:

''வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலையாரம் பிறைமுடித்த
ஐயன்திரு மனையாள் அடித்தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும்தவம் உடையார்க்கு உளவாகிய
சின்னங்களே''

என்பது அபிராமிபட்டர் தம் அருட்பாவாகும்'.

இத்தகைய அம்பிகையின் அருள் அம்சம் நிரம்பியவர்களாக விளங்குவதால்தான் பெண்மையும் தாய்மையும் நம் பாரதத் திருநாட்டில் பெரிதும் போற்றப்படுகிறது. இந்நவராத்திரி விழாவைச் சிறப்புடன் கொண்டாடுவதிலும் விழாவைச் சிறப்புடன் கொண்டாடுவதிலும் பெண்களுக்குத்தான் அதிகப் பங்கிருக்கிறது. இரண்டு வயதுமுதல் பத்து வயது வரையிலுள்ள கன்னிகைகளை நவதுர்க்கைகளாக போற்றி அவர்களைக்கொண்டே பராசக்தியைப் பூசிப்பதும், வீட்டிற்குவரும் பெண்களைத் தெய்வாம்சமாக நினைத்து அவர்களுக்கு மலர், சந்தனம், பழம்

கண்ணாடி, இரவிக்கை, ஆடை, அறுசுவை உண்டி ஆகியவற்றை வழங்கிச் சிறப்பிப்பதும் கொண்டு, நவராத்திரி விழாவைப் பெண்களுக்கே உரிய பெருமை மிகு விழா என்று கூறுவதும் பொருத்தமுடைய ஒன்றாகும். மேலும் மகிடாசுரன் பெண்களை, மிக எளியவர்களாகமதித்து ஆற்றல்இல்லாத அவர்கள் தமக்கு ஒன்றும் தீங்கு செய்யஇயலாது என்றெண்ணி ஒரு பெண்ணால் மட்டுமே மரணம் வேண்டும் என்பதாக வரம் பெற்றிருந்தான். புவனம் பதினான்கினையும் படைத்தவளே பராசக்தியாகிய ஒரு பெண்தான் என்பதை அவன் உணரவில்லை.

'பூத்தவளே புவனம்பதினான்கையும் பூத்த வண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உனைஅன்றி மற்றோர் தெய்வம்
வந்திப்பதே''

என்றல்லவா அபிராமிபட்டர் புவனங்கள் பதினான்கையும் படைத்த மாபெரும் சக்தியாகப் பெண்மையைப் போற்றுகிறார். அப்பெண்மை சக்தியாகிய பராசக்தியே மகிடனை சம்ஹாரம்செய்து மகிடாசுரமர்த்தினியாகவும் விளங்குகின்றாள். இம் மகிடாசுரமத்தினியை விஜயதசமி நன்னாளில் பூசித்து வழிபட்டால் வழிபட்டோர்க்குக் கல்வி, தனம், உடல் நலம் முதலான பதினாறுபேறுகளும் எளிதில் வாய்க்கும். 'பதினாறும் பெற்றும் பெருவாழ்வு வாழ' மக்கள் கொண்டாடும் ஒப்பற்ற விழாவே பெண்மையைப் போற்றும் நவராத்திரி விழாவாகும்.

''கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்''
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்
பெரிய தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே''

என்பதால் முதல் மூவருக்கும் அன்னையாகிய அபிராமிதேவி யாவருக்கும் பதினாறுபேறுகளையும் இந் நவராத்திரி விழாவின்போது அருளிடுவாள் என்பது திண்ணமான உண்மையாகும்.

*நிறைவுரை*

ஒன்று பரம்பொருள் அது பராசக்தி என்பதை உணர்த்தும் ஒப்பற்ற விழாவாகவும், இறைசக்தி ஆட்டுவிக்க ஆடும் பொம்மைகளே உயிரினங்கள் என்பதைத் தெளிவு செய்யும் சீர்மிகு விழாவாகவும், கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற நட்புணர்வுத் தத்துவத்தை நிலைநாட்டும் கலை வளர் கண்கவர் விழாவாகவும் விளங்கும் நவராத்திரி விழாவை யாவரும் ஆண்டுதோறும் சிறப்புறக் கொண்டாடி, பதினாறு பேறுகளும் குறைவறப்பெற்று நிறைவுற வாழ்ந்திடுவோமாக.

★★★

## வாசகர் எண்ணங்கள்

''குறளில் ஆன்மீகம்'' எனும் தலைப்பில் ஆணையாளர் அவர்கள் எழுதியிருந்த கட்டுரை படித்தேன். ''அகால மரணம்'' என்ற கருத்தை அவர் மறுத்து, எல்லா மரணமுமே காலத்தில் ஏற்படுகின்ற மரணமே என்று கருதவேண்டும் என்று அவர் எழுதியிருந்த சிந்தனை மிகவும் ஏற்கத்தக்க ஒன்று என்பது என் கருத்து.

- ஏ.வி. இராஜகோபால்,
வளசரவாக்கம். சென்னை - 87.

''என்றும் பதினாறு'' என வரம்பெற்ற மார்க்கண்டேயன், இன்று இவ்வுலகில் ஏன் இல்லை என்று பல நாளும் நான் சிந்திப்பது உண்டு. ''மார்கண்டேயனுடைய கண் முன்னாலேயே அவருடைய சந்ததியினர் எல்லாம் இறந்து விட்டதாலேயே மார்க்கண்டேயன் வாழ விரும்பாமல் முக்தி அடைந்து விட்டார்'' என்று ஆணையாளர் அவர்கள் என் ஐயத்தை அறவே போக்கிவிட்டார்கள். என் ஐயத்தைத் தீர்த்த ஆணையாளர் அவர்களுக்கும், ''திருக்கோயில்'' இதழிற்கும் மிக்க நன்றி.

- அ. சுப்பிரமணியன்,
சேலம் - 636 001.

''விநாயகனே வினை தீர்ப்பவனே''. கட்டுரையும், விநாயகர் 108 போற்றியும் மூலமுதற் கடவுளாம் விநாயகர் திருவருளைக் கற்பாருக்கு வாரி வாரி வழங்கும் என்பதில் ஐயமில்லை.

- எஸ். சாந்தி, பெங்களூர்.

# பட்சணம் எனக்கொள் ஒரு விக்கின சமர்த்தன்

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

விநாயகப் பெருமானை முழு முதற் கடவுளாக போற்றி வணங்கி வருவது இந்து மதம். தொல்காப்பியம் காலம் தொட்டு எல்லாக் காவியங்களும், சங்க நூல்களும் விநாயகரது துதியை கொண்டே பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. முதன் முதலாக வரும் எந்த ஒரு விழாவோ சடங்குகளோ தொடங்குவதற்கு முன்னம், எந்த விக்னமும் நேரிடாதிருக்க முதற் கடவுளான விநாயகப் பெருமானைப் போற்றித்தான் பிறகு ஏனைய இஷ்ட தெய்வங்களுக்கு பூசைகளைச் செய்வது வழக்கம். கணேசரை நம் நாட்டில் மட்டுமல்ல, உலகம் பூராவுமே கொண்டாடி வந்துள்ளனர், கணேசரை நாம் கணேஷ் என அழைப்பது போன்று கிரேக்கர்களும், ரோமானியர்களும், ஐரோப்பாவில் ஜேனஷ் என்ற தெய்வத்தை முதல் முதலில வணங்கி விட்டு, பிறகு ஏனைய சடங்குகளை நிகழ்த்தி வந்துள்ளனர். இந்த கணேஷ்தான் அங்குள்ளவர்களால் ஜேனஷ் என்பதாக அழைக்கப்பட்டு வந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. அண்மையில் கம்போடியாவிலும் இதனைக்கண்டு பிடித்துள்ளதைப் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. ஜேனஷ் என்ற தெய்வத்தின் அடிப்படை யில் தான், ஆங்கிலேயர்கள் வருடத்திற்கு 12 மாதம் என ஏற்படுத்தி முதல் மாதத்தை ஜேனஷ் என்ற தெய்வத்தின் பெயரால் அமைக்க எண்ணி, ஜனவரி என பெயர் வைத்தனர், ஜேனஷ்தான் பிற்காலத்தில் ஜனவரி எனக் கூறப்பட்டதாக வரலாறு அறிவிக்கிறது. இதனால் ஏனைய தெய்வங்களுக்கு இல்லாத தனிச்சிறப்பு விநாயகப் பெருமானுக்கு ஏற்பட்டது.

எல்லாத் தெய்வங்களுக்கும் விழாக்கள் பல இருந்தாலும் விநாயகருக்கு மட்டும் வருடத்தில் ஒரே ஒரு நாள் சதுர்த்தி விழா கொண்டாடிப் பெருமை சேர்த்தனர் ஆன்றோர்கள்.


எல்லாத் தெய்வங்களையும் பொதுவாக ஒரே பாணியில் வணங்கும் விதத்தினை ஏற்படுத்திக் கொண்டபோதிலும், விநாயகருடைய சந்நிதானத்தில் மட்டும் வணங்க இரு கரங்களாலும் செவிகளைப் பற்றிக்கொண்டு சிரத்தில் குட்டிக்கொண்டும், தோப்புக்கரணம்போடும் பாங்கினையும் நம் முன்னோர்கள் அறிவித்துள்ளனர். இதனால் விநாயகர் மற்ற தெய்வங்களைப்போல் இல்லாமல் தனிப்பட்ட வணங்கும் விதத்தினைக் கொண்டவராவார்.

ஏனைய தெய்வங்கள் அனைத்துக்கும் பொருந்தும் விதத்தில் பொதுவாக படைக்கும் நிவேதன பிரசாதங்கள் போல் அல்லாது, விநாயகருக்கு மட்டும் தனிப்பட்ட வகையில் நிவேதன வகைகளில் அவ்வையார் தமது பாடலில், 'பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும்'' இவை நான்கினை மட்டும் கூறியுள்ளபோதிலும் அதனையும் மிஞ்சிவிட்டார் அருணகிரியார்.

பொதுவாகவே எந்த அருளாளர்களும் தாங்கள் இயற்றிய கவிகளுக்கு தாங்களே தலைப்பு வைத்துக்கொண்டோ, அல்லது ஆன்மிகப் பெரியோர்களால் இவர்களது பாடல்களுக்கு தலைப்பு தந்தோ வழங்கி வருவதுதான் இயல்பு. இதற்கு மாறாக, வயலூர் பொல்லாப் பிள்ளையாரே இவரது கவிகளுக்கு ''திருப்புகழ்'' எனத் தலைப்பு தந்தது ஒரு தனி சிறப்பாகும். இதனைக் கருத்தில் கொண்டு அருணகிரியார் தாம் பாடிய 'பக்கரைவிசித்ரமணி'' என்னும் பாடலில் வயலூர் பொல்லாப் பிள்ளையாருக்கு தன்னுடைய நன்றியை சமர்ப்பிக்கும்விதத்தில் 20 வகை நிவேதனப் பொருள்களின் பட்டியலை இப்பாடலின் பின் நான்கு அடிகளில் கூறியுள்ளது. இவர்க்கு முன்பும் சரி, பின்பும் சரி எவரும் இதுபோன்று பட்டியலை விநாயகருக்கு அமைத்துப் பாடியதாக எங்கும் குறிப்புகள் காணவில்லை. இனி பின் பகுதி நான்கு அடிகளையும், அதன் பொருளையும் பார்ப்போம்:

பாடலின்பின்4 அடிகள் கீழே தரப்பட்டுள்ளன.

இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரி அவல் துவரை இளநீர்வண்
டெச்சில் பயறுஅப்ப வகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழம் இடிப்பல்வகை தனிமூலம்;
மிக்க அடி சிறகடலை பக்ஷணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனும் அருளாழி;



1. இக்கு - கரும்பு
2. அவரை - அவரை
3. நற்கனிகள் - நல்ல பழங்கள்
4. சர்க்கரை - சர்க்கரை
5. பருப்புடன் - பருப்பு
6. நெய் - நெய்
7. எள் - எள்
8. பொரி - பொரி
9. அவல் - அவல்
10. இளநீர் - இளநீர்
11. வண்டு எச்சில் - வண்டின் எச்சில் எனப் படும் தேன்
12. பயறு - பயறு
13. அப்பவகை - அப்பவகைகள்
14. பச்சரிசி - பச்சரிசி
15. பிட்டு - பிட்டு (அரிசி மாவினால் செய்யப்பட்டது)
16. வெளிரிப்பழம் - வெள்ளரிப்பழம்
17. இடிப்பல்வகை - அரிசியை இடித்து செய்கின்ற மோதகம் (கொழுக்கட்டை)
18. தனிமூலம் - ஒப்பற்ற கிழங்குகள்
19. மிக்க அடிசில் - சிறந்த உணவு வகைளான சித்தாரன்னம்
20. கடலை - கடலை

பக்ஷணம் எனக்கொள் ஒரு விக்கின சமர்த்தன்.

என்னும் அருளாழி - பக்ஷணமாக கொள்ளும் ஒப்பற்ற விக்ன சமர்த்தர் எனும் அருட் கடலே.

இதனை மேலும் விரிக்கின், கட்டுரை நீளும் எனக்கருதியே இத்துடன் நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

## சென்ற இதழில் முகப்பை அலங்கரிப்பவர்

சென்ற இதழின் முகப்பில் வெளியான அருள்மிகு வீரபத்திர சுவாமி திருவானைக்கா அருள்மிகு அகிலாண்டேசுவரி ஆலய வெளிப்பிரகாரத்தில் உள்ள தனிக் கோயிலில் 6 அடி உயர மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இப்படத்தை வழங்கியுதவியவர் பேராசிரியர் டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன் அவர்கள்.

# சரஸ்வதி பூசை

- டாக்டர் டி. செல்வராஜ்

*1. இலக்கியத்தில் சரஸ்வதி*

வீரம் - பொருட் செல்வம் - கல்விச் செல்வம் ஆகிய முப்பெரும் செல்வங்களின் அதிதேவதைகள் கொற்றவை - இலக்குமி - சரஸ்வதி. இவர்கள் மூவரும் மிக்க பழமை வாய்ந்த தாய்த்தெய்வங்கள். இவர்களை வழிபடுவது சக்தி வழிபாடு.

பழங்காலத்தில் கொற்றவை வழிபாடே தமிழக மெங்கும் பரவலாகப் பரவியிருந்தது. தமிழக மக்கள் கல்விச் செல்வ வளப்பத்துடன், பொருள் செல்வ வளப்பத்துடன் வாழ்வதை விட வீரப்பொலிவுடன் வீறுடன் வாழ்வதையே மிக விரும்பினர். போர்க்கள வாழ்க்கையில் அவர்களது ஈடுபாடு அதிகமாக இருந்தது.

எனவே, பழந்தமிழர் சரஸ்வதியை விட இலக்குமியை ஆர்வத்துடன் வழிபட்டனர். இலக்குமியை விடக் கொற்றவையை மிக்க ஆர்வத்துடன் வழிபட்டனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

1. தமிழின் மிகப்பழைய நூலான தொல்காப்பியத்தில் கொற்றவையைப் பற்றிய குறிப்பு உண்டு இலக்குமி சரஸ்வதி குறிக்கப்படவில்லை.

2. சங்க இலக்கியங்களில் கொற்றவையைப் பற்றிய விளக்கங்கள் மிகுதி. இவற்றை விட இலக்குமியைப் பற்றிய விவரங்கள் குறைவு. ஆனால், சரஸ்வதியைப்பற்றிய செய்திகள் இருப்பதாகத் தோன்றவில்லை.

3. சிலப்பதிகாரம், ''மாமகள், நாமகள், மாமகிடற் செற்றுகந்த கோமகள்'' என்று இலக்கமி - சரஸ்வதி - கொற்றவை என்ற முப்பெருந்தேவியரை முறையே வரிசைப்படுத்துகின்றது. (சிலம்பு, அழற்படுகாதை, வெண்பா). சரஸ்வதியை முதன்முதல் தெளிவாகக் குறிப்பிடுகின்ற நூல் சிலப்பதிகாரம்.

**4. மணிமேகலை :** இது பௌத்தப்பெருங் காப்பியம்.

''சிந்தாதேவி செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!''
(மணிமேகலை 14 : 16-17)

''சிந்தா விளக்கின் செழுங்கலை நியமம்''
(மணி மேகலை 13 : 106)

என்ற மணிமேகலையின் தொடர்கள் சரஸ்வதியைப் பற்றியன.

சிந்தா தேவி = சிந்தையில் குடி கொண்ட அம்மன்.
சிந்தா விளக்கு = சிந்தையில் ஒளிவீசுகின்ற விளக்கு.
நாமிசைப்பாவை = நாமகள்
கலை நியமம் = கலைக் கோயில்; சரஸ்வதி வீற்றிருக்கின்ற கோயில்.

சிந்தையிலம், நாவிலும் குடிகொண்டிருக்கின்ற சரஸ்வதிக்குத்தனிக் கோயில்களும் பழங்காலத்தில் இருந்தன என்பது ஒருதலை; வெள்ளிடை மலை.

**5. திருமந்திரத்தின் 1066, 1067 ஆம் பாடல்கள்** சரஸ்வதியின் திருவடிவம் முதலியவற்றைப் பற்றியன ஆகும்.

''சிவத்தின் உடலும், உயிருமாய்க்
கலந்து நின்றாள். உயிர்களுக்கு
முக்தி இன்பம் அருளுகின்ற பராசக்தி
அவள். என்னுடன் ஒன்றாக எனது
உயிரில் புகுந்து, உணர்வாகி நின்றாள்.
அவளே ஏட்டைக்கையிலே ஏந்திய
சரஸ்வதி; பரஞ்சுடர் வடிவானவள்'',
(திருமந்திரம் 1066)

''சரஸ்வதி கையில் ஏடேந்திய நங்கை; எங்கள் இறைவி; முக்கண்ணி; படிக நிறத்தவள்; அவள் விரும்புகின்ற இடம் வெண்டாமரை; வேதங்களை இசைப்பவள். அவளது திருவடிகளைத் தலை மேல் சூடிக் கொள்ளுங்கள்; அவளைப்பற்றிய தோத்திரப்பாடல்களைச் சொல்லுங்கள்.'' (திருமந்திரம் 1067)

**6. தேவாரம் :** (அ) ''சினமலி அறுபகை'' என்று தொடங்குகின்ற, திருஞான சம்பந்தர் தேவாரத்தில் கலைமகளைப்பற்றிய குறிப்பு உள்ளது.

(ஆ) திருநாவுக்கரசர், காமியஞ் செய்து''.... என்ற தேவாரத்தில், கும்பகோணத்தில் ''சரஸ்வதி நதி'' என்ற புனித தீர்த்தம் உறைவதைச் சுட்டிக்காட்டுகின்றார்.



*7. சீவக சிந்தாமணி :* சரஸ்வதியை வணங்குகின்ற முறையில், நாமகள் இலம்பகத்தோடு தொடங்குகின்றது சீவக சிந்தாமணி. இது சமணப் பெருங் காப்பியம்.

*8. தக்கயாகப்பரணி :* ஒட்டக் கூத்தர் சரஸ்வதியை ''ஆற்றங்கரைச் சொற் இழத்தி வாழியே'' என்று வாழ்த்துகின்றார். (பாடல் 813) இவர் சரஸ்வதிக்குச் சூட்டிய இப்பெயர் மிக்க அழகு வாய்ந்தது.

*9. தனிப்பாடல் திரட்டு*

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்

என்று சரஸ்வதியை வருணித்தவர் காளமேகப் புலவர். *(பணி = அணிகள்)*

இவ்வாறு சரஸ்வதியைப்பற்றிய சிற்சில தொடர்களும், சிற்சில பாடல்களும் இலக்கியங்களில் அங்கங்கே விரவிக் காணப்படுகின்றன.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் முப்பது பாடல்களைக் கொண்ட சரஸ்வதி அந்தாதியை இயற்றினார். தமிழில் சரஸ்வதியைப்பற்றிய முதல் வழிபாட்டு நூல் இதுவே.

அடுத்து, பத்துப் பாடல்களைக் கொண்ட சகலகலாவல்லி மாலை என்ற பிரபந்தத்தை அருளியவர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

மேற்கண்ட இரண்டு நூல்களும், தினமும் சரஸ்வதியை வணங்கி, வழிபட்டுப் போற்றுவதற்குரிய சிறந்த நூல்களாம்.

சரஸ்வதி வழிபாட்டுப் பாடல்கள், புராணங்களில் பல காணப்படுகின்றன. மேலும், அவளைப் போற்றி வள்ளலார் பாடிய பாடல்கள் சிலவும், பாரதியார் பாடிய பாடல்கள் பலவும் உண்டு. தனிப் பாடல்கள் பலவும் உள்ளன.

''புத்தகத்துள்ளுறை மாதே''... என்ற சரஸ்வதி சிந்தனைப்பாடல் ஒன்று இங்குச்சிறப்பாகக் குறிக்கத் தக்கது. இது நாடோடிப்பாடல்.

★★★

**2. சரஸ்வதியின் பெயர்கள்**

சரஸ் = ஆறு; வதி = உறைகின்றவள். ஆற்றங் கரையில் உறைகின்றவள் ''சரஸ்வதி''. பிரமனின் மனைவி பிராமி. அனைத்தையும் தாங்குபவள் - பாரத ஆண்டில் நதியாக வந்தவள் பாரதி. வாக்கின் தேவி வாணி. சரத் காலப் பூசைக்குரியவள் சாரதா. அன்ன வாகனமுடையவள் ''ஹம்ச வாகினி.''

மேலும் 1. பனுவலாட்டி 2. வெண்தாமரையாள் 3. வெள்ளை மேனியாள் 4. நான்முகன் கிழத்தி 5. நாமகள் 6. கலைமகள் 7. ஞான மூர்த்தி 8. நற்பா மடந்தை 9. சாவித்திரி 10. காயத்திரி. முதலிய பற்பல பெயர்களுக்குரியவள் சரஸ்வதி.

### 3. சரஸ்வதியின் தோற்றப் பொலிவு

சரஸ்வதி தூய, ஒளி வீசுகின்ற ஞானத்தின் வடிவம். இவள் படிக நிறமுடையவள். இவளது ஆடையும் வெள்ளை; அணிகலன்களும் வெள்ளை; இவள் வீற்றிருக்கின்ற தாமரையின் நிறமும் வெள்ளை. வெள்ளை என்பது தூய்மையின் சின்னம்; ஞானத்தின் அறிகுறி.

சரஸ்வதியின் திருவடிவத்தை நின்ற கோலம், இருந்த கோலம், நடனக் கோலம் என்ற முப்பெருங் கோலங்களில் தரிசிக்கலாம். வீறு கொண்ட கம்பீரமோ, கோப ஆவேசமோ சற்றும் இழையோடாத அமைதியான திருமுக மண்டலம் இவளுக்குரியது.

பிரம்ம வித்தை சரஸ்வதியின் திருமுகம்; நான்கு வேதங்கள் - திருக்கைகள்; எண்ணும், எழுத்தும் - திருக்கண்கள்; சுமிருதி - வயிறு; புராண இதிகாசங்கள் - திருவடிகள். ஓங்காரம் - யாழ் (வீணை). வேத சாரமாகிய காயத்திரி மந்திரத்தின் திருவடிவமே சரஸ்வதி. இவ்வாறு இவள் அற்புதமான பொருள்களின் அழகிய திருவடிவமாகத் திகழ்கின்றாள்.

சரஸ்வதியின் திருக்கைகளில் இருக்கின்ற பொருள்கள் பல. முக்கியமான சிலவற்றைத் தரிசிக்கலாம்.

அ) முத்திரைகள் : அபயகரமும், வரத கரமும் பொதுவாக எல்லாத் தெய்வங்களிடத்தும் இருப்பன.

ஆ) மங்கலப் பொருள்கள் : 1. தாமரை 2. கண்ணாடி 3. மணி 4. சங்கு 5. பூரண கும்பம்.

இ) ஞானத்தின் சின்னங்கள் : 1. வீணை 2. அட்சமாலை 3. கமண்டலம் 4. ஏடு 5. எழுத்தாணி

ஈ) அஞ்ஞானத்தைப் பிளக்கின்ற கருவிகள்

1. அங்குசம் 2. பாசம் 3. வில்; அம்பு 4. சக்கரம் 5 திரிசூலம் 6. தண்டம். 7. கத்திரி.

1. அங்குசம், பாசம் - விநாயகரின் அம்சம்
2. திரிசூலம் - சிவ பெருமானின் அம்சம்
3. சங்கு, சக்கரம் - நாராயணனின் அம்சம்
4. வில், அம்பு - இராமனின் அம்சம்
5. அட்சமாலை, கமண்டலம் - பிரமனின் அம்சம்

இவ்வாறு பல தெய்வங்களின் அம்சங்கள் நிறைந்தவள் சரஸ்வதி. அதாவது, பல தெய்வங்களுக்குரிய தனித்தனி ஆற்றல்கள் இவள் ஒருத்தியிடமே சங்கமம்.

### 4. சரஸ்வதி நதி :

ஆற்றங்கரையில் உறைகின்ற சரஸ்வதி அதே பெயரோடு ஓர் ஆறாகவும் இயங்குகின்றாள். ''சீர் மூர்'' இமய மலைப்பகுதியில் அவள் தோன்றுகின்றாள். தானேஸ்வரத்தில் இயங்கத்தொடங்கி, விநாசன தீர்த்தத்தில் மறைந்து விடுகின்றாள்.

அலகாபாத் இரயில் நிலையத்திலிருந்து தெற்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது ''பிரயாகை'' என்ற வைணவத்திருத்தலம். இங்கே மும்மூர்த்திகளும் மூன்று நதிகளின் வடிவத்தில் உள்ளனர் என்று நம்புகின்றனர்.

பிரயாகையில் கங்கை நதியும், யமுனை நதியும், பூமிக்கடியில் மறைந்து இயங்குவதாகக் கருதப்படுகின்ற சரஸ்வதி நதியும் சங்கமம் ஆகின்ற இடமே ''திரிவேணி சங்கமம்.'' இப்படி, சரஸ்வதி நதி பூமிக்கடியில் மறைந்து இயங்குவதற்கும் ஒரு புராணக்கதை உண்டு.

இந்திரன் ததீசி முனிவரைக் கொன்றான். அவரது முதுகெலும்பை வச்சிராயுதமாகப் பயன்படுத்தி விருத்திராசுரனையும் கொன்றான். ததீசியின் மகன் பிப்பலாதன், தன் தந்தையைக் கொன்ற இந்திரனைப் பழி தீர்க்கத் தவம் செய்தான். தவத்தீயைத் திரட்டி இந்திரனை நோக்கி வீசினான். இத்தீயின் உக்கிரத்தைத் தாங்க முடியாத இந்திரனும், தேவர்களும் ஓடினர். முடிவில் பிரமனிடம் சரணடைந்தனர்.

பிரமன் தீயின் உக்கிரத்தைச் சரஸ்வதியே தணிக்க முடியும் என்று கருதினான். அவள் நதியின் வடிவெடுத்து, அத்தீயைத் தணித்து, ஏந்திக்கடலில் வீசி வீழ்த்தும்படி கூறினான். சரஸ்வதி ஒரு வேண்டுகோளுடன் இதற்கு ஒப்புக்கொண்டாள்.

சரஸ்வதி ''நான் தீயின் உக்கிரத்தையும் தாங்க வேண்டும். என்னிடம் வந்து நீராடி இறக்குகின்ற பாவிகளின் பாவச் சுமைகளையும் தாங்க வேண்டும். இந்த இரட்டைச்சுமைகளை என்னால் தாங்க முடியாது. எனவே, மனிதர்களின் கண்களுக்குப் புலப்படாத ஒரு நதியாக நான் மாறிப் பூமக்குள் மறைந்து செல்வேன்'' என்று வேண்டினாள். அதன்படி, சரஸ்வதி நதி கண்களுக்குப்புலனாவதில்லை. 'அந்தர் வாஹினியாக' இயங்குகின்றாள். பிரயாகையிலும் இவ்வாறு கங்கையுடனும், யமுனையுடனும் சங்கமம் ஆகின்றாள்.

அறிவியல் அடிப்படையில், சரஸ்வதி நதி ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இமய மலையில் தோன்றி, இந்தியாவின் வடமேற்குப் பகுதி வழியாக அரபிக்கடலில் சங்கமம் ஆவது. நதியின் தோற்றம் புலனாகும்; இயக்கம் புலனாகாது.

பூமிழின் தட்ப வெப்பநிலை மாற்றம், அதன் சுழற்சிப்பாதை, அதன் சாய்மானம் முதலியவற்றைக் கணக்கில் கொண்டால், சரஸ்வதி நதி மறுபடியும் வெளிப்படக்கூடிய வாய்ப்பு அதிகமாக உள்ளது என்று அறிவியல் கருதுகின்றது. ஆனால் அது தோன்றிப் புலனாகின்ற காலத்தைத் துல்லியமாகக் கணிதுக்கூற முடியாது என்பது அறிவியலின் முடிபு.

### 5. பிரமனும் சரஸ்வதியும்

வேத முதல்வன் பிரமன். இவன் தனது ஞான ஆற்றலால் சரஸ்வதியைப் படைத்தான். அவனையே திருமணமும் செய்துகொண்டான். பிரமனது நாக்கில் சரஸ்வதி உறைகின்றாளாம்.

ஒருமுறை பிரமன் சரஸ்வதி அறியாமல் ஒரு வேள்வியை நடத்தினான். இதனை அறிந்த சரஸ்வதி ஒரு நதியாகப் பிரவாகம் எடுத்துச் சீற்றத்துடன் கடிதோடி வந்து அந்த வேள்வியை அழித்தாள். அங்கே குழுமியிருந்த தேவர்களையும் சபித்தாள்.

பிரமனின் தேவியர் இருவர். ஒருத்தி சரஸ்வதி; வலப்புறம் இருப்பவள். மற்றொருத்தி சாவித்திரி; இடப்புறம் இருப்பவள்.

பிரமனின் சிலைகளைப் பல கோயில்களில் மூன்று நிலைகளில் காணமுடியும். 1. பிரமன் - தனித்த நிலை 2. சரஸ்வதியுடன் பிரமன். 3. இருதேவியருடன் பிரமன்.

### 6. சரஸ்வதியும் தட்சிணாமூர்த்தியும்

சரஸ்வதியும், தட்சிணாமூர்த்தியும் ஆன்மாவுக்கு ஞானப்பேரொளி அருளுகின்ற ஞானமூர்த்திகள் ஆவர். இடக்காலின்மேல் வலக்கால் பொருந்த இருவரும் பெருமிதத்துடன் வீற்றிருக்கின்ற கோலமே தனி அழகு. இருவரது திருக்கைகளிலும் ஞானத்தின் அறிகுறிகளான அட்சமாலையும், ஏட்டுச் சுவடியும் திகழ்கின்றன. இவர்களது சடாமுடியும், சந்திரகலையும் ஞானத்தின் சின்னங்களே.

வீணையை மீட்டுகின்ற பாவனையில் வீற்றிருக்கின்றவள் சரஸ்வதி; வீணையை ஏந்தியிருக்கின்றவர் வீணா தட்சிணாமூர்த்தி.

அஞ்ஞான இருளைப் பிளந்தெறிகின்ற நெற்றிக்கண் இருவருக்கும் உண்டு. இருவரும் தேவகோட்டத் தெய்வங்கள். இவர்களுக்குத் தனிச்சன்னிதிகளும், கோயில்களும் மிகக் குறைவு.

மகேசுவர வடிவங்கள் இருபத்தைந்தில் தட்சிணாமூர்த்தியின் திருவடிவம் ஒன்று. இவர் சைவத்திற்குரிய ஆதி குரு; ஞால குரு; ஞான குரு. ஆனால் சரஸ்வதி எல்லாச் சமயங்களுக்கும் பொது; எல்லா நாட்டவருக்கும் பொது.

### 7. எல்லாச் சமயங்களுக்கும் பொது

சிவாலயங்களில், தேவ கோட்டங்களிலும், பிரகாரங்களிலும், கோபுரங்களிலும் சரஸ்வதியின் சிலைகள் பல காணப்படுகின்றன. சரஸ்வதி பூசைகள் சிவாலயங்களில், அதிகமாகவே நடைபெறுகின்றன என்றும் கூறலாம்.

வங்காளத்தில் விஷ்ணு மூர்த்தங்களில் பூமி தேவிக்குப் பதிலாகச் சரஸ்வதி வடிவம் உள்ளது.

சமணர் சுருதிதேவி, வாக்தேவி, ஜின ஐஸ்வரியம் என்ற பெயர்களில் சரஸ்வதியை வழிபடுகின்றனர்.

பௌத்தர் சரஸ்வதியை மஞ்ஜுஸ்ரீ என்றும், வாகீஸ்வரி என்றும் குறிப்பிடுகின்றனர். இவர்கள் கூறுகின்ற சரஸ்வதியின் திருவுருவ வேறுபாடுகள் ஐந்து, அவை 1. மகா சரஸ்வதி 2. வஜ்ர வீணா சரஸ்வதி 3 வஜ்ர சாரதா 4. ஆர்ய சரஸ்வதி 5. வஜ்ர சரஸ்வதி என்பன.

### 8. எல்லா நாட்டவருக்கும் பொது

கல்வி எல்லா நாட்டவருக்கும் பொது. கல்வித் தெய்வமான சரஸ்வதியும் எல்லா நாட்டவருக்கும் பொது. இவளை 'அதினே' என்று கிரேக்கரும், 'மினர்வா' என்று உரோமானியரும், 'பென்-டென்' என்று ஜப்பானியரும், 'யங்-சனம்' என்று திபெத்தியர்களும் வழிபடுகின்றனர் என்று அறிய முடிகின்றது.

### 9. ஆலயங்களில் சரஸ்வதி

தமிழகத்தில் பல சமயங்களைச் சார்ந்த ஆலயங்கள் உள்ளன. இவற்றில் பற்பல அமைப்பில் சரஸ்வதி சிற்பங்கள் காணப்படுகின்றன; இவை அமைந்திருக்கின்ற இடங்கள்: 1. ஆலயச்சுவர்கள் 2. கோட்டங்கள் 3. சன்னிதிகம்; பிரகாரங்கள் 4. தனி ஆலயம் 5. சப்த மாதர் வரிசை 6. கோபுரம். சில சான்றுகளுடன் தரிசிக்கலாம்.

*1. ஆலயச் சுவர்கள் :* மகாபலிபுரத்தில் கடற்கரையில் அமைந்த மூன்று கோயில்களில், கிழக்கு நோக்கிய கோயிலின் கருவறை உட்சுவரில் பிரமனும், சரஸ்வதியும் திருக்காட்சி தருகின்றனர். காலத்தால் பழமையான சரஸ்வதியின் சிற்பம் இந்தச் சிற்பமாகத்தான் இருக்க வேண்டும்.

அடுத்து, காஞ்சிபுரக் கைலாச நாதர் கோயிலில் கருவறையின் புறச் சுவர்களில் சரஸ்வதி, இலக்குமி, சேட்டையின் திருவுருவங்கள் இருக்கின்றன. இவற்றுள் சரஸ்வதியின் சிற்பம், மிகப்பழைய சிற்பங்களில் மற்றொன்று.

*2. கோட்டங்கள் :* கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபங்களின் புறச் சுவர்களில் அமைந்த மாடங்களைக் கோட்டங்கள் என்பர். சோழர்கள் காலத்தில், கோட்டங்களில் சரஸ்வதியின் சிற்பங்களை அழகுற வடித்தனர். 1. திருமங்கலக்குடி 2. தஞ்சைப்பெரிய கோயில் 3. கங்கைகொண்ட சோழபுரம் 4. துறையூர் முதலிய தலங்களில் சரஸ்வதி கோட்டத்தெய்வமாக விளங்குகின்றாள்.

*3. சன்னிதிகள், பிரகாரங்கள் :* ஆலயங்களில், கருவறையின் பின்புறமுள்ள மண்டபத்தின் வடமேற்கு மூலையில் சரஸ்வதியைப் பிரதிட்டை செய்வது முறையாகும். இவளைப்பரிவாரத் தெய்வமாகக் கொள்ள வேண்டும்.

சில ஆலயங்களில் துர்க்கை - சரஸ்வதி - இலக்குமி - சேட்டை என்ற நால்வரது மூர்த்தங்களை வரிசையாகக் காண முடியும்.

1. திருக்கண்டியூர் - பிரமனுடன் சரஸ்வதி.

2. மதுரை - சரஸ்வதிக்குத் தனிச்சன்னிதி

3. நாகூர்; நாகராசா கோயில் - சரஸ்வதி - செப்புத்திருமேனி.

*4. தனி ஆலயம் :* கூத்தனூரில் சரஸ்வதிக்கென்று தனி ஆலயம் ஒன்று உள்ளது.

★ ★ ★

நாகை மாவட்டத்தில், அரிசிலாற்றங்கரையில் இருப்பது கூத்தனூர். சோழன் ஒட்டக்கூத்தருக்கு அன்பளிப்பாக அளித்த ஊர் கூத்தனூர். இங்கே அவர் தாமே அமைத்த திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சரஸ்வதியே ''ஆற்றங்கரைச் சொற்கிழத்தி''.

சரஸ்வதி பூசையன்று, கூத்தனூரில் அம்மனின் திருவடிகள் வெளிமண்டபம் வரையில் நீண்டிருக்குமாறு அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. அன்றைய தினம் பக்தர்கள் அனைவரும் திருவடிகளைத் தாங்களே குங்குமத்தாலும், மலர்களாலும் அர்ச்சனை செய்து வழிபடலாம். இந்த வழிபாட்டு முறை இப்போதும் வழக்கத்தில் உள்ளது.

*5. சப்த மாதர் வரிசை :* சப்த மாதர் சிலைகளைப்பல ஆலயங்களில் காணலாம். சப்தமாதர் : 1. பிராமி 2. வைணவி 3. இந்திராணி 4. சாமுண்டி 5. மகேசுவரி 6. கௌமாரி 7. வாராகி. இந்த வரிசையில் பெரும்பாலும் ஆறாவதாக இருப்பவள் பிராமி - பிரமன் மனைவி - சரஸ்வதி.

*6. கோபுரங்கள் :* கோபுரங்களின் வடபகுதியில் பிரமனுடனும், கீழ் மாடங்களில் இலக்குமியுடனும் சரஸ்வதியின் திருவுருவைப் புனைவது வழக்கம்.

### 10. வழிபாட்டில் சரஸ்வதி

நவராத்திரியின் ஒன்பது நாள்களில், முதல் மூன்று நாள்கள் துர்க்கைக்கும், இடை மூன்று நாள்கள் இலக்குமிக்கும், இறுதி மூன்று நாள்கள் சரஸ்வதிக்குமுரிய வழிபாட்டு நாள்கள்.

மூலம் - சரஸ்வதி அவதரித்த நட்சத்திரம் என்பர். கல்வியின் தொடக்கத்திற்கு மூல நாளும் அதுவே. மூல நட்சத்திரம் உச்சநிலையில் இருக்கின்ற போது, கோயில்களிலும், வீடுகளிலும் சரஸ்வதியை வழிபட்டு, அவள் அருளுகின்ற கருணைக்கடலிலும், கல்விக்கடலிலும் மூழ்கி மூழ்கித்திளைக்க வேண்டும். அதற்கு அவளது அருட்பார்வை நமக்கு எப்போதும் வேண்டும்.

# 'பிரமரியம்மன்' சரிதம்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

தாயானவள் தனக்கு எத்தனை குழந்தைகள் இருந்தாலும், தன் பிள்ளைகள் மீது ஒரு காரணமும் காரியமும் கருதாது கனிவு இரக்கத்தோடு வித்தியாசம் இல்லாமல் அனைவரிடமும் அன்பு காட்டுவாள்! அதே போல் அம்பிகையானவள் தான் படைத்த உயிரினங்கள் அனைத்திடமும் வித்தியாசம் பாராமல் அன்பு காட்டுபவள். பக்தர்களையும், தேவர்களையும், மும்மூர்த்திகள் ஆகியோரையும் வித்தியாசம் பாராமல், கருணையினால் ஆட்கொண்ட 'பிரமரி'யின் சரித்திரம் இது ஆகும். 'பிரமரங்கள்' என்றால் வண்டுகள் ஆகும். அன்னை, புவனங்களைக்காத்தருளும் புவனேஸ்வரி அம்மன் 'பிரமரங்கள்' உருவில் உலகைக் காத்ததால் 'பிரமரியம்மன்' என்று பெயர் பெற்றாள்.

முன்பொரு சமயம் 'அருணன்' என்ற அசுர குல மன்னன் வாழ்ந்துவரலானான். அவன் மகா வலிமையுடையவனாகவும்,தேவர்களிடம்வெறுப்புடையவனாகவும் இருந்தான். அவன்தன்னினத்தார் வசிக்கும் பாதாள லோகத்தை விட்டு வெளியேறி இமயமலையை அடைந்தான். அங்கு கங்கைக் கரையில் ஓர் பர்ண சாலையை அமைத்துக் கொண்டு அங்கிருந்தவண்ணம் காயத்ரியை ஜபித்து தவம் புரியலானான். பதினாறாயிரம் ஆண்டுகள் அன்ன ஆகாரமின்றி வெறும் தண்ணீரை மட்டும் அருந்தியும், பத்தாயிரம் ஆண்டுகள் வெறும் காற்றை மட்டும் உட்கொண்டும் அருந்தவம் புரிந்து வந்தான். அத்தகைய தவ வலிமையில் அவனது உடலிலிருந்து ஓர் அக்னி எழுந்து எல்லா உலகங்களையும் பஸ்மமாக்கியது! (தீக்கிரையாக்கியது). அதைக் கண்டதும் தேவர்களெல்லாம் இது என்ன அதிசயமென்று பயந்து நடுங்கி பிரம்மனை சரண் அடைந்து முறையிட்டார்கள். பிரம்மா அந்த அசுரனிடம் சென்று பார்த்தார். அவன் உடலில் உயிர் மட்டுமே இருப்பதையும் உடலெங்கும் ஒட்டை ஒட்டையாய் இருப்பதையும், வரண்டுகாய்ந்திருப்பதையும், கண்கள் தியான நோக்கோடு நிலைத்திருப்பதையும், இரண்டாவது அக்னியோ என்று நினைக்கும் படி அவன் பிரகாசிப்பதையும் கண்டார். பிறகு அவர் அந்த அசுரனை நோக்கி, ''அருணனே! உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்'' என்றார். அருணன் கண் திறந்தான், காயத்ரீ தேவி யோடும், நான்கு வேதங்களோடும், கமண்டலம், ஜபமாலை முதலியவற்றோடும், பிரும்ம சொருபமாக ஒளிரும் பிரம்மதேவனைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியுடன், அவன் எழுந்து வணங்கிப் போற்றி, ''சிருஷ்டி கர்த்தாவே; நான் எப்போதுமே மரணமடையாமல் இருக்க வேண்டும்; இதுவே என் பிரார்த்தனை'', என்றான். அதற்கு பிரம்மா ''அசுர வேந்தனே, நானும் விஷ்ணு முதலான சகல தேவர்களும் கூட, ஒரு முடிவு என்னும் மரண நியதிக்கு உட்பட்டவர்களாகவே இருக்கிறோம் என்றால், மற்றவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஆகையால் என்னால் கொடுக்கக் கூடிய வரம் எதுவோ, அதை கேட்பாயாக; நீ புத்திமான்! கோபம்கொள்ள வேண்டாம் என்றார். இதற்குமுன் வரம் கொடுத்தவர்கள் பட்ட பாடுகளை நினைத்தார் போலும்!

அசுரன் ஆலோசித்துவிட்டு, இதுவரை யாரும் கேட்காத வரத்தைக் கேட்கவேண்டும் என்று, தன் போல் வரம் பெற்றவர்கள் வரத்தில் இல்லாதவைகளால் அழிந்ததையும் நினைத்து, வரம் கேட்கலானான். ''படைப்புக் கடவுளே! எனக்கு யுத்தத்திலோ, அஸ்திரம், சஸ்திரம் முதலான ஆயுதங்களாலோ, ஆணாலோ பெண்ணாலோ, இரண்டுகால், நான்கு கால்களையுடைய உயிரினங்களாலோ மரணம் உண்டாகாமல், வேறெந்தவிதத்திலாவது மரணம் வந்தால் வரட்டும். தற்போது தேவர்களையெல்லாம் வெல்வதற்குடைய அளவற்ற வலிமையைக் கொடுப்பீராக''! என்று கேட்டான். பிரம்மாவும், ''அப்படியே ஆகட்டும்'' என்று கூறித் தம் இருப்பிடம் சென்றார்.

இதன் பின் அசுரன் மமதைக்கொண்டு, பாதாளத்திலிருந்த அசுரர்களை எல்லாம் வெளியே அழைத்து வந்து, அவர்களில் ஒருவனிடம், தேவேந்திரனிடம் சென்று, நான் போருக்கு அழைப்பதாக அறைகூவல் விட்டு வரும்படி ஏவினான். அவன் சென்று தேவேந்திரனிடம் சொல்ல, தேவேந்திரனோ, பிரம்மாவிடம் ஓடினான்; பிரம்மாவும் தேவேந்திரனும் சேர்ந்து மகாவிஷ்ணுவிடம் சென்றனர். இவர்கள் அனைவருமாக ஆலோசித்து, கயிலயங்கிரிக்குச் சென்று, சிவ பெருமானிடம் சரணடைந்தனர். தங்கள் துன்பங்களைக் கூறினார்கள். தேவர்கள் மிகவும் மனம் வருந்தி, அந்த அசுரன் போரினாலோ, அஸ்திரங்களினாலோ, விலங்குகளினாலோ, மரணமடையாதபடி பிரம்மனிடம் வரம் பெற்றுள்ளானே, இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? என்று கலங்கினார்கள்.

அப்போது, ''தேவர்களே! பராசக்தியான தேவியைச் சரண் அடையுங்கள்; அவள் உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவாள்! அருணாசுரன் செய்துவரும் காயத்ரீ ஜபத்தை செய்யாமல் கைவிட்டு விடுவானேயானால் அவன் மரணத்துக்கு ஆளாவான்.'' என்று ஒரு வானொலி எழுந்தது. இதைக் கேட்ட இந்திரன் தேவகுல குருவான பிரகஸ்பதியை வரவழைத்து, ''குருவே! தேவர்களின்

துயரங்களை நீங்கள் அறிவீர்கள். அதை ஒழிப்பதற்குத் தங்களைத் தவிர வேறொருவரில்லை! ஆகையால் நீங்கள் அருணாசுரனிடம் சென்று வானொலி வாக்குப் படி தேவிகாயத்ரி ஜபத்தை அந்த அசுரன் செய்யாம லிருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்யுங்கள். நாங்களும் தியான யோகத்தினால் தேவி யைத் துதிக்கிறோம். தேவியும் அங்கு உமக்கு உதவி புரிவாள்'' என்று சொல்லியனுப்பினான். பிறகு அவன் தேவர்களோடு புறப்பட்டு ''ஜாம்பூதேஸ்வரி''யை அடைந்து, மாயாபீஜ மந்திரத்தை ஜபித்து, தேவியை பூஜித்து வந்தான்.

இந்திரன் வேண்டுகோளுக்கிணங்க தேவகுரு பிரகஸ்பதியும் அப்போதே அருணாசுரனிடம் சென்று அவனைக் கண்டார். அவரைக்கண்ட அருணாசுரன் ''என்ன, தேவகுருவே நீர் ஏன் இங்கு வந்தீர்கள்? என் பகைவனான தேவேந்திரனல்லவோ உம்மீது அன்பு வைத்திருப்பவன்'' என்றான். தேவகுருவும், ''என்னால் பூஜிக்கப்பட்ட தேவியை, நீயும் தினந்தோறும் பூஜித்து வருவதால், நீயல்லவோ என் மீது (பிரியம்) அன்பு வைப்பவன். அதனால்தான் உன்னைப் பார்க்க வந்தேன்'' என்றார்.

அந்த ஒரு வார்த்தையாலேயே அருணாசுரன் குதூகலப்பட்டு தான் செய்து வந்த ஜபத்தின் சிறப்பை எண்ணி இறுமாப்புகொண்டான். அந்த அகம்பாவத் தாலும், வேதமாயையினாலும், பரம மந்திரமான காயத்ரீ ஜபத்தைச் செய்ய அவன் மறந்து விட்டான். அதை மறந்தவுடன் அவனது தேஜஸ் அகன்று போய் விட்டது. தேவகுருவும் தான் வந்த வேலை முடிந்தது என்று நினைத்து, இந்திரனிடம் திரும்பிச் சென்று சொன்னான். இந்திரன் மகிழ்ந்து மகேஸ்வரியைத் தேவர்களுடன் பூஜித்தான்.

சிலகாலம் சென்ற பிறகு, ஜகன்மாதாவும், லோக நாயகியும், சகல தேவர்களாலும் போற்றப்படுபவளும், சர்வாத்மிகையும், சர்வ ஜனனியும், சர்வேஸ்வரியும், கோடி சூரியப்பிரகாசினியும், கோடி மன்மத சௌந்தர்ய வதியும், வினோதமான சந்தனம் பூசியவளும், விசித் திரமான வண்டுகள் மொய்ப்பதைப் போல் அமைந் துள்ள நவமணி மாலைகளை அணிந்திருப்பவளும், அது போலவே மலர்மாலைகளைச் சூடியவளும் ஆன தேவி, எண்ணில்லாப் பெண் வண்டுகள், 'ஹ்ரீம்' என்கிற மந்திரத்தை பக்கத்திற்குப் பக்கம் கோடி கோடி முறைகள் சப்தித்துக் கொண்டு தொடர்ந்து 'வர சிருங்கார ஆடைகளுடனும் அணிகலன்களுடனும் அலங்காரங்க ளோடு சாந்தையாயும், வரதம், அபயம் உடையவளாக வும், கருணை பொருந்திய முகத்துடன் கடல்போல் காட்சி அளித்தாள். அந்த தேவியைச் சகல தேவர்களும் மகிழ்ச்சி பொங்கும் இதயங்களோடு பார்த்து, பரவசப் பட்டு வணங்கிப் பலவாறாகவும் தோத்தரித்தார்கள்.

தேவர்களின் துதியைக் கேட்டதும், ஜகதாம் பிகையான தேவி புவனேஸ்வரி குயில் போன்ற குரலில், ''தேவர்களே! நீங்கள் வேண்டும் வரங்களைக் கேளுங் கள்'' என்றாள். தேவர்கள் தங்களுக்கு அருணாசுரனால் ஏற்பட்டுள்ள துன்பங்களைக் கூறித்தங்களைக் காத் தருளும்படி வேண்டினார்கள்.

பிரமரங்களால் (வண்டுகளால்) சூழப்பட்டிருக் கும் 'பிரமரியம்பிகை' தனது திருக்கரங்களிலிருந்து பிரமரங்களையும் (வண்டுகளையும்) எப்போதும் தன் னைச் சூழ்ந்திருக்கும் பிரமரங்களையும் (வண்டு களையும்) பலவித வண்டு உருவங்கள் எடுக்கச்செய்து, அவற்றை அருணாசுரன் மீது ஏவி விட்டாள். அவ் வண்டுகள் மூன்று உலகங்களிலும் குருவிக்கூட்டங் களைப் போல் வரிசை வரிசையாகப் புறப்பட்டு வானவெளி முழுவதிலும் அடர்ந்து, மறைந்துப் பூமி யில் இருளை உண்டாக்கி, எங்கு பார்த்தாலும் 'பிரமரமயமாய்' (வண்டுகள் மயமாய்) காட்சியளித் தன. மக்களெல்லாம் அதைக் கண்டு மலைத்து வியப் புற்றார்கள்! ராட்சஸர்கள் எங்கெங்கு இருக்கிறார் களோ, அங்கெங்கெல்லாம் வண்டுகள் பறந்து சென்று, அவர்களது மார்பைத் துளைத்து மரணமடையச் செய்தன. அம்புகள் மார்பைத் துளைப்பதைப்போல வண்டுகள்துளைத்ததைப் பார்க்கும்போது, போர்க்களத் தில் வீரர்களாலும் அதைச் செய்ய முடியாது எனத் தோன்றியது. போர்க்களத்தில் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளும் உரையாடல்கூட இல்லாமல் ஒரே கணத்தில் ராட்சஸர்கள் அனைவரிடமிருந்து மரண ஓசை எழுந்தது. இவ்வாறு அருணாசுரன் முதலான அசுரர்களை எல்லாம் பிரமரங்கள் (வண்டுகள்) அழித்து விட்டு தேவியிடம் திரும்பிவந்தன. அதைக்கண்ட அமரர்கள் அனைவரும் ஜகன்மாதாவான புவனேஸ் வரி அம்மனின் அருட் செயலை வியந்தனர்; போற்றிப் பூசித்தனர்; வேதங்களால் துதித்தனர். பலவித வாத்தி யங்களையும் முழங்கி, அரம்பையின் ஆடல் பாடல் களோடு, ஜெயகோஷம் எழுப்பினர்.

இவ்வாறு தேவர்கள் தன்னைக்கொண்டாடு வதைக் கண்டு மகிழ்ந்து தேவி, அவர்களுக்கு வரங் களை வழங்கி, தன் பக்தியையும் தந்து அருளி மறைந்தாள்.

அருணாசுரனின் வரத்தின்படி இரண்டு கால், நான்கு கால்கள் மிருகங்களால் அழியக்கூடாது என்ப தாகும். வண்டுக்கு ஆறுகால்கள்; அவன் வரத்தின்படி தேவி அவனை அழித்தாள் என்பதாகும்.


பிராமரியின் சரிதம் இதுவேயாகும் என்று நாரதரின் வேண்டுகோளுக்கு இணங்க, ஸ்ரீமந்நாராயணர் சொல்லுவதாக தேவி பாகவதத்தில் விரிவாகக்கூறப் பட்டுள்ளது.

இதன் மூலம் 'காயத்ரீ மந்திர'த்தின் சக்தியை யும் அறிய முடிகிறது. நாமும் காயத்ரீ ஜபம் செய்து அவள் அருளைப் பெறுவோமாக!

சுபம்.

# பழனி மலையைச் சாரேனோ சாமி அழகைப் பாரேனோ!

- பேராசிரியர் டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்
மதிப்பியல் பேராசிரியர், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு



நினைத்ததை அளித்திடும், மனத்தினை உருக் கிடும், வழித்துணை வந்திடும் பழனி முருகனின் இன்னருள் பெற்றிட வாரீர்! வாரீர்!

ஊரெல்லாம் முருகன் உறைந்தாலும் ஆறு இடங்களைச் சிறப்பாக வழிபடும் மரபு தமிழகத் தில் உண்டு. ஆறுபடைவீடு என்ற அமைப்பில் ஆறுமுகக்கடவுள் மிகமிகச்சிறப்பாக வழிபடப்படு கிறார். ஆறு இடங்களிலும் நாள்தோறும் விழாக் களே. இவற்றில் திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழநி இம் மூன்றும் முதன்மைப் பெற்ற முத்தலங்க ளாகும்.

திருமுருகாற்றுப் படையில் திருஆவினன் குடி என்ற மூன்றாவது படைவீடாக நக்கீர பெரு மான் பழநியைப் புகழ்ந்துள்ளார்.

ஆறுபடை வீடுகளில் இன்று வீறுபெற நிற்பது, அருணகிரி நாதரின் திருப்புகழில் 96 பாடல் பெற்றது. இரண்டாயிரமாண்டு கால கலாச்சார பக்தி மேம்பாட்டு மாடமாயிருப்பது, சித்தர்கள் வாழ்வாய்ச் சிறந்தது. வேறு கடவுளர்க்கில்லாத கோலக்காட்சி கொண்டது - இப்படி இப்பழநியின் பெருமையை அடுக்கிக் கொண்டே போகலாம்.

திருமுருகன் உறையும் சிறப்புத்தலங்கள் ஆறு படைவீடுகளில் ஐந்தாவது படைவீடு திருத்தணிகை. இத்தலம் நக்கீரர். அருணகிரிநாதர். அருள்பிரகாச இராமலிங்க அடிகளார், முத்துசாமி தீட்சிதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்ற சிறப்புடையது.

படைவீடு என்றால் படைக்கலச் சாலை அல் லது பாசறை என்பதே பொருள். முருகனின் ஆறு படைவீடு என்றால் முருகப்பெருமான் பாசறை அமைத் துத்தங்கிய ஆறுஇடங்கள் என்று தான் சொல்ல வேண்டும். தமிழகத்திலே முருகன் திருக்கோயில் கொண்டு வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள் பாலிக் கும் தலங்கள் ஆறு. அவை ஆறும் அவனுடைய ஆறு படைவீடுகள். அந்த ஆறும் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பவையாகும்.

திருச்செந்தூரில் சூரனை வதைத்தான். திருப் பரங்குன்றத்தில் தெய்வானையை மணந்தான். திருவா வினன்குடியில் தந்தையுடன் மாறுபட்டு ஆண்டியாய் நின்றான், திருவேரகத்தில் தந்தைக்கு மந்திரம் சொன் னான். குன்றுதோறாடலாம் திருத்தணியில் வள்ளியை மணந்து நின்றான். மதுரையை அடுத்த பழமுதிர் சோலையில் எல்லாக் குன்றுகளிலும் உறைவது போல எல்லாச் சோலைகளிலும் முருகன் உறைகின்றான். பழமுதிர்சோலை அழகர்மலை என்பதாகும்.

குறிஞ்சிப்பூ அற்புத மலர். குறிஞ்சியின் தனிச் சிறப்பு முருகனைக் குறிப்பதேயாகும். குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகன் தமிழ்த் தெய்வம் என்று போற்றப்படுகிறான்.

''சேயோன் மேய மைவரை உலகம்'' என்று மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சியைத் தொல்காப்பியர் பாடியுள்ளார். நக்கீரர், ஔவை போன்ற புலவர்களின் பாடலால் சிறப்புப் பெற்றது குறிஞ்சியாகும். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகியவற்றிற்கு முறையே மாயோன், முருகன், இந்

திரன், வருணன் ஆகியவர்களைத் தலைவர்களாக வகுத்த தமிழ் நூல்களே முருகன் தமிழ்த் தெய்வம் என்று வழங்குகின்றன.

''முத்தமிழால் வைதாரையும் வாழ்விப்பவன்
முருகன்''

என்னும் சிறப்பே முருகனுக்கு உண்டு.

குறிஞ்சிநிலத் தெய்வம் முருகன் என்ற கருத்தில் குன்றுதோறாடும் மாண்புடையவன் என்கிறார் நக்கீரர். குறமகளிர் ஆடும் குரவைக் கூத்துக்குக் கை கொடுத்து அந்த வேட்டுவ மகளிருடன் மலைகள் தோறும் விரும்பி விளையாடுதலும், ஊர்கள் தோறும் மக்கள் கொண்டாடும் திருவிழாக்களிலும் தன்பால் அன்புடைய அடியார்கள் உளமுருகிப் பூசை செய்யுமிடத்தும், வேலன் என்பான் வேல் ஏந்தி வெறியாட்டம் ஆடுமிடத்தும், காடுகளிலும், இளமரச் சோலைகளிலும், கடம்ப மரங்களிலும் முருகன் உறைகிறான் என்கிறார் நக்கீரர். திருத்தணியின் தனிச் சிறப்பு இது.

திருமுருகனின் பெருமையைப் பேசும் தமிழ் நூல்களிலே சிறந்ததும், ''புலவராற்றுப்படை'' என வழங்கும் மிகப் பழமையானதுமான நூல், திருமுருகாற்றுப் படையே. அது முருகன் பெருமையைப் பேசுகின்றது. சங்க இலக்கியங்களில் சிறப்புடையது. நக்கீரர் கயிலை செல்லும் வழியில் ஒரு பூதத்திடம் சிறை பட்டபோது முருகாற்றுப்படை பாட, முருகன் வந்து அவரை சிறைமீட்டார் என்பது வரலாறு. திருமுருகாற்றுப்படையில் முருகனின் சின்னங்களாகச் சேவற் கொடியும், கடம்பமாலையும், செங்காந்தள் மலரும் குறிப்பிடப்படுகின்றன. நக்கீரருக்குப் பின் தோன்றிய அருணகிரிநாதரும் ஆறுபடை வீடுகள் பற்றி அழகுறப் பாடி உள்ளார். நக்கீரர் பழமுதிர்சோலையை ஒரு திருத்தலம் என்றும் மலைப்பகுதி என்றும் சிறப்பித்துப் பாடி உள்ளார்.

முருகப்பெருமானின் திருவருளால் இந்த உலகில் வாழும் பொழுதே பேரானந்தம் பெற்ற சீவன் முக்தராக விளங்கியவர் அருணகிரிநாதர்.

அவர் இயற்றிய திருப்புகழின் பெருமையைக் கூறுவது எளிதா? அவர் பாடிய கந்தர் அநுபூதி 51 பாடல்களை உடையது. நினைத்ததை நிறைவேற்றியருளும் தன்மை பெற்றவன் முருகன் என்பதை அநுபூதி பாடல்கள் மூலம் நாம் உணரலாம். அநுபூதி என்பதற்கு அநுபவம் என்பது பொருள். கந்தர் அநுபூதியில்,

''தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அநுபூதிபிறந்த ததுவே.'' என்கிறார்.

கந்தர் அநுபூதியில் முதலில் விநாயகப் பெருமானின் காப்புச்செய்யுளும் பிறகு 51 பாடல்களும் உள்ளன. அருணகிரிநாதர் திருப்புகழ் முதலிய நூல்களில் தம்மை இழித்துக்கொண்டு பாடல்களைப் பாடியிருப்பது போலவே, இந்த நூலிலும் தாம் விரும்பத்தகாத குணங்களுடையவர் என்பதைப் பாடுகிறார். முதிர்ந்த அநுபவம் பெற்றுப் 'பேசா அநுபூதி பிறந்ததுவே' என்று சொல்லும் நிலையில் இருந்து பாடியது கந்தர் அநுபூதி.

கந்தர் அநுபூதியைப் பாடியது எதற்காக? தம் குறையை வெளிப்படுத்தி முருகன் பெருமையை உயர்த்துவதற்காக மட்டுமல்ல.

''நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்.''

நெஞ்சம் என்னும் கனமான கல் நெகிழ்ந்து உருகும்படியாகத் தஞ்சம் புக்கால் கருணைபுரியும் ஆறுமுக நாதனுக்கு, பொருளாற் சிறந்த சொற்களையுடைய - அலங்கரிப்பதற்குரிய இந்த ஞானமாலையைச் சிறந்த நிலையில் இருந்து அணிவதற்காக ஐந்து கரத்தை உடைய அண்ணன் கணபதியைப் பணிவோம் என்கிறார். இந்த ஞானமாலையில் முருகன் பெருமை, கருணை, தாம் பெற்ற அநுபவம் ஆகிய மலர்களையும் நம் அவல நிலையாகிய இலைகளையும் சேர்த்துத் தொகுத்திருக்கிறார்.

கந்தர் அநுபூதி தினமும் பாடிப் பரவ வேண்டிய தெய்வீக நூல்.

குமரகுருபர சுவாமிகள் ஐந்தாண்டு வரையில் ஊமையாக இருந்து திருச்செந்திலாண்டவன் சந்நிதியில் வாய் பேசத் தொடங்கினார். அப்போது அவருடைய திருவாக்கிலிருந்து மலர்ந்தது கந்தர் கலிவெண்பா என்ற அற்புதப் படைப்பு. சைவசித்தாந்த உண்மைகளும் முருகப் பெருமான் திருக்கோலமும் நமக்கு விளக்குவதோடு மெய்சிலிர்க்க வைக்கும் தன்மையுடையது கந்தர் கலிவெண்பாப்பாடல்.

அருணகிரிநாதரின் 'கந்தர் அலங்காரம்' பெரும் புலவர்களின் பாராட்டைப் பெற்ற பக்தி நூல். கந்தப் பெருமானின் கருணைத் தன்மையையும், வள்ளி தெய்வயானை அம்மையாரின் அருள் நலங்களையும், சேவல் மயில், வேல் ஆகியவற்றின் சிறப்புகளையும் அழகுற அலங்காரமாக விவரித்து அருணகிரிநாதர் பக்திச் செறிவோடு 100 பாடல்களாகப் பாடி உள்ளதால் இதன் பெயரே 'கந்தர் அலங்காரம்' என்று அமைந்துவிட்டது.

இந்நூலின் காப்புச் செய்யுள் திருவண்ணா மலைக் கோயிலில் ஒரு கோபுரத்து வடக்குப் புறத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் ''கோபுரத்து இளைய னார்'' என்னும் முருகப்பெருமான் மீது அமைந்துள் ளது. இப்பெருமானே அருணகிரிநாதரைத் தடுத்தாட் கொண்டு அருளியவர். அருணகிரிநாதர்க்கு

''முத்தைத்தரு பத்தித் திருநகை''

என்ற திருப்புகழுக்கு அடியெடுத்துக் கொடுத்த பெருமையும், இந்தக் கோபுரத்து இளையனாரின் கருணையேயாகும். ஓதுவதற்கு இனிய எளிய நல்ல கவிதை நடையில் பக்திச் சுவையோடு அமைந்தது இந்தக் கந்தர் அலங்காரம். கந்தப்பெருமானின் கருணையைப் பெறுவதற்கு உருகி உருகி அருண கிரிநாதர் பாடியுள்ள பாடல்களில் இதோ சில.

''காவிக் கமலக் கழலுடன் சேர்த்து
எனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகனனே
துணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம்
பிலாத தனிக்கொடி போல்
பாவித் தனிமனம் தள்ளாடி
வாடிப் பதைக்கின்றதே'' (பா - 69)

என்கிறார் அருணகிரிநாதர். நம் உள்ளமும் பதைக் கின்றதல்லவா இந்த அடிகளைப் படிக்கும் போது, அடுத்த பாடலைக் கவனியுங்கள்,

''விழிக்குத் துணை, திருமென்மலர்
பாதங்கள்; மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா என்னும்
நாமங்கள்; முன்பு செய்த
பழிக்குத்துணை, அவன் பன்னிரு
தோளும், பயந்ததனி
வழிக்குத் துணை, வடிவேலும்
செங்கோடன் மயூரமுமே.'' (பா - 70)

எத்தனை எளிய பாடல்!

யமனைக் கண்டும் அஞ்ச வேண்டாம், இதோ யமனையே அச்சுறுத்தி எச்சரிக்கும் பாடல்;

''தண்டா யுதமும் திரிசூல மும்விழத்
தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழ விடுவேன், செந்தில்
வேலனுக்குத்
தொண்டாகிய என் அவிரோத ஞானச்
சுடர் வடிவாள்
கண்டாய் அடா, அந்தகா, வந்துபார் சற்றென்
கைக்கெட்டவே,'' (பா - 25)

''பட்டிக்கடாவில் வரும் அந்தகா உன்னைப் பார்
அறிய
வெட்டிப்புறங்கண் டலாது விடேன் வெய்ய
சூரனைப் போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெருமான்
திருமுன்பு நின்றேன்
கட்டிப் புறப்படடா சக்திவாள் என்றன்
கையது வே,'' (பா -64)

''வாராது அகல் அந்தகா வந்த போது
உயிர் வாங்குவனே
யமராசன் விட்ட கடை ஏடு வந்தினி என்
செய்யுமே''

யமனையே நடுங்கச் செய்யும் பாடல் இது.

தாயுமான சுவாமிகளையே கவர்ந்தநூல் கந்தர் அலங்காரம்

''யான்தான் எனல் அறலே இன்ப நிட்டை
என்று அருணைக்
கோன்தான் உரைத்தமொழி கொள்ளாயோ
நன்னெஞ்சே''

என்று நான், எனது என்ற அகங்காரத்தை விட் டொழித்துப் பாடிய அருணகிரிநாதரின் பெருமை யைத் தம்பால் இருத்திக் கொள்கிறார் தாயுமானார் தாம் பாடிய மேற்கண்ட பாடலில்.

கந்தபுராணத்தைப் பாடிய கச்சியப்ப சிவாச் சாரியார் காஞ்சியிலுள்ள குமரகோட்டத்தில் அந் நூலை அரங்கேற்றினார். முருகக் கடவுளின் திரு அவ தார வரலாறும், சூரபதுமன் சிவ பெருமானிடம் 1008 அண்டங்களையும் 108 யுகம் வரை ஆட்சிபுரியும் பெருவரம் பெற்றுத் தேவர்களைச் சிறை செய்த வரலாறும், முருகக் கடவுள் சூரபதுமனுடன் போர் புரிந்து வென்று ஆட்கொண்ட வரலாறும், தேவர் சிறை நீக்கி அவரை விண்ணில் குடியேற்றிய வர லாறும் முருகக் கடவுள், தெய்வயானை வள்ளி யம்மை இவர்களைத் திருமணம் புரிந்தருளிய வர லாறும் கூறுவதே கந்தபுராண நூலாகும்.

முருகப் பெருமான் கச்சியப்ப சிவாச்சாரியார் கனவில் தோன்றி, ''அன்பனே, நம்மைத் தமிழில் பாடுவாயாக'' எனப் பணித்தருளி ''திகட சக்கர'' என்று முதலடியும் எடுத்துக் கொடுத்து மறைந் தருளினார். அதன் படியே அவர் அத்தொடக்கத்தையே முதலிற் கொண்டு அந்நூலைப் பாடி முடித்தனர் என் பது வரலாறு.

கந்தபுராணம் தமிழில் ஆறு காண்டங்களை உடையது. அவை உற்பத்தி காண்டம், அசுர காண் டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்சகாண்டம் என்பன.

(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)

# கந்தர் சஷ்டி விரதம்

– ஆ. சண்முகம், பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையர் / நிர்வாக அதிகாரி
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

திருச்செந்தூர் என்றால் சூரனை ஆட்கொண்ட திருத்தலம் என்பது அனைவரும் அறிந்தது. திருச்செந் தூருக்கு சூரசம்கார விழா தனிச்சிறப்புடையது. முருகப்பெருமான் அவதார நோக்கம் ஈடேறிய திருத் தலம்; கந்தர்சஷ்டி விரதம் மிகவும் புகழ்வாய்ந்தது. முருகப்பெருமானுக்கு மூன்று விரதங்கள் இன்றியமை யாதது.

வார விரதம் வெள்ளிக்கிழமை விரதம். மாத விரதம் கார்த்திகை விரதம். ஆண்டு விரதம் ஐப்பசி மாத கந்தர்சஷ்டி விரதமாகும்.

விரதம், நோன்பு என்றால் பட்டினி கிடப்பது என்பதல்ல; உறுதி வைராக்கியம், உடலாலும் உள்ளத்தாலும், செயலாலும் தீமை செய்யாதிருப்பதே விரதமாகும். தனித்திரு-பசித்திரு-விழித்திரு என்பதே கந்தர் சஷ்டி நோன்பின் தத்துவமாகும். இனிது இனிது ஏகாந்தம் இனிது. தனிமையில் இறைவன் சிந்தனை யுடன் அவன் அருட்பாடல்களை தியானிப்பது. பசித் திருத்தல் ஆன்மபசி - ஆன்மா ஈடேற தேவையான இறை சிந்தனைகளைச் சிந்தித்தல். உடல் பசியால் இருப்பது சுகாதார முறைப்படி நன்று; பசித்திருந்தால் ஜீரண உறுப்புகள் ஓய்வு பெற்று செவ்வனே இயங்கும். உடலில் உள்ள கழிவு பொருள்கள் நீங்கும். புலன்கள் கட்டுப்படும்.

**வார விரதம்**

முருகனுக்குரிய நாள் வெள்ளிக்கிழமை; தூய்மையான சிந்தனையுடன் உபவாசமிருந்து முரு கனை நினைத்து வணங்க வேண்டும். முருகனுக்கு நிவேதித்த பால், பழம் ஆகியவைகளை உண்ண வேண்டும். வாரவிரதத்தை பகீரதன் இருந்து அருள் பெற்றான் என்று கூறப்படுகிறது. மாத விரதம் கார்த்திகை நட்சத்திரமாகும். கார்த்திகை விரதத்தில் நாம் பலகாரம் உண்பது என்பது தவறு. ஒருகை நீரையே உட்கொள்ள வேண்டும். கார்த்திகை மறுநாள் தான் அன்னதானம் செய்து உணவு உட்கொள்ள வேண் டும். இவ்விரதத்தை 12 ஆண்டுகள் தொடர்ந்து கடை பிடிக்கவேண்டும். இதனால் ஞானம் பெறலாம், வீடுபேறு கிடைக்கும்; நாரதர் இவ்விரதம் இருந்து முருகப்பெருமான் அருள் பெற்றார்.

**கந்தர் சஷ்டி விரதம்**

ஐப்பசி மாதம் சுக்லபட்சத்து பிரதமை முத லாக சஷ்டி வரை இவ்விரதம் கடைபிடிக்கப்படும். ஆறுநாட்களும் பகல் பொழுது மட்டும் ஆறு மிளகு, ஆறுகை தண்ணீர் அருந்துதல் சிறப்பானது. அதி காலை 4 மணிக்கு துயிலெழுந்து கடல் நீராடி காலைக்கடன்கள் முடித்து திருநீறு அணிந்து முரு கனை தியானிக்க வேண்டும். கந்த புராணம் பாராய ணம் செய்யவேண்டும். பகலில் தூங்கவே கூடாது. புராணப்படி தூங்கினால் அந்தணர் நூறுபேரைக் கொன்ற பாவம்வரும் என்று கந்தபுராணம் கூறுகிறது. எல்லா வுயிரையும் தன்னுயிர் போல் நினைக்கவேண்டும். இந்த விரதத்தை தேவர்கள் நோற்று சூரபத்மனிட மிருந்து விடுதலை பெற்றனர். இந்த மூவகை விரதங் களில் கந்தர் சஷ்டி விரதம் மிகவும் சிறப்புடையது. இவ்விரத நாட்களில் பக்தர்கள் முருகப்பெருமானின் அரும்பாடல்களை வாயினால் பாடி மனத்தால் சிந் திக்க வேண்டும்; இந்த சஷ்டி விரதமிருக்க திருச் செந்தூர் திருத்தலமே உரியது. ஆகவே விரதமிருக்க வரும் பக்தர்களுக்கு திருக்கோயில் சார்பில் குடிநீர் வசதி, சுகாதார வசதி, மருத்துவ வசதி, தரிசனத்திற் கான வரிசை முறை ஏற்பாடு, அனைத்தும் செய்யப் பட்டுள்ளது. பக்தர்கள் செந்தூர் நோக்கி வாரீர்! கந்தர் சஷ்டி விரதமிருந்து செந்தில் ஆண்டவன் அருள் பெற வாரீர் வாரீர் என்று அழைக்கிறோம்.

★★★

## திருச்செந்தூரில் சூரசம்ஹார விழா

திருச்செந்தூரில் இவ்வாண்டு சூரசம்ஹார விழா 2.11.2000 வியாழன் அன்று சிறப்புற நடைபெறவுள்ளது.

# அடியார்கள் கண்ட செந்தில் முருகன்

- கலைமாமணி அருளரசு மாசிலாமணி

## 1. நக்கீரர் கண்ட முருகன்

நக்கீரர் திருமுருகாற்றுப்படை என்ற நூலை அருளியுள்ளார். இது சங்க இலக்கிய நூலாகும். சைவத் திருமுறையில் 11ஆம் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது. இதை மந்திரங்களைக் கூறுவதுபோல் பாராயணம் செய்வர். நக்கீரர் திருச்செந்தில் வருகிறார். திருச்செந் தூரில் மூலமூர்த்தி ஒரே முகமுடைய திருக் கோலத்துடன் காட்சி தருகிறார். உற்சவர் ஆறுமுகர். ஆறுமுகர் சந்நிதி சண்முக விலாசம் என்று அழைக்கப்படும். பெரிய திருவிழாவாகிய மாசி ஆவணித் திருவிழாவில் சண்முகர் எழுந்தருளி வீதியுலா வருவார். அந்தத் திருமூர்த்தியாகிய சண்முகப்பெருமானின் ஆறுமுகத்தையும் பன்னிரு திருக்கரத்தையும் பற்றிப் பாடியுள்ளார்.

முருகப்பெருமான் யானை மீது எழுந்தருளி வருகின்றார். முருகனுடைய வாகனம் மயில். அவருக்கு யானை வாகனமும் உண்டு. முருகன் எல்லா உலகத்திற்கும் நாயகன். நக்கீரர் முதலில் யானை வாகனத்தின் தன்மையைப் பாடுகிறார். யானைக்கு மதம் (அகங்காரம்) வரும். அப்போது முருகன் அங்குசத்தைப் பயன்படுத்தி அதனை அடக்குவார். நமது யானை தானே என்று நினையாது தண்டிக்கும் தன்மையாளர் முருகன்.

அந்த யானை பெருவீரமுடையது. முருகன் ஏறிவரும் பெருமையுடையது. அது மிகவும் வலிமை மிக்கது. அந்த யானையை யாராலும் எதிர்த்து போர் செய்யமுடியாது. எமனுடைய செயலை யாராலும் மாற்ற முடியாது'' மாற்றரும் கூற்றம்'' என்பர் தொல்காப்பியர். எத்தகை வலிமை ஆற்றல், பண பலம், பதவிபலம், சக்தி இருந்தாலும் எமனை ஒரு கணம் தாமதிக்கும்படி யாராலும் செய்யமுடியாது. ஓர் உயிரைக் கொண்டுபோக வரும் எமனை யாராலும் தடுக்கமுடியாது. அதேபோல் அந்த யானை போர்க்களம் புகுந்தால் யாராலும் அதை எதிர்க்கமுடியாத படி எமனைக் கண்டு அஞ்சுவது போல் அஞ்சுவர். முருகன் அடியவர்கள் வேண்டும்போது அங்கே போய் நிற்பார். பக்தர்களின் அன்பைவிட முருகப் பெருமானின் கருணைக்கு வேகம் அதிகம். ஒருதரம் முருகா! என்று அழைத்தால் அங்கே ஓடிச்சென்று அடியார்களின் துன்பத்தை நீக்கும் கருணையாளன். அதற்காகவே யானைவாகனம் உடையவனாக உள்ளான். நக்கீரர் யானை வாகனம் மீது எழுந்தருளியுள்ள முருகனைக் காண்கிறார். அவரதுதிருமுடி, திருமேனி, திருக்கரங்கள், மணிகளால் ஆன கிரீடம், ஒளிபொருந்திய மணிகள், அதற்குக் கீழே அவன் அழகு முகங்கள் நமது இதயத்தைக் கவர்ந்துவிடுகிறது. அவன் திருமுகம் சந்திரன்போல் உள்ளது. அவன் காது குழைகள் நட்சத்திரங்களான உள்ளன. நக்கீரர் ஆறு திருமுகங்கள் அருட்தன்மையினையும் திருக் கரங்கள் பன்னிரண்டின் செயல்பாடுகளையும் விரிவாகத் திருமுருகாற்றுப்படையில் பாடியுள்ளார். ஆறு திருமுகங்களுடனும் பன்னிரு திருக் கரங்களுடனும் யானைமீது ஏறி திருச்செந்தூருக்கு எழுந்தருள்கிறார்.

''உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலை இய பண்பே''


என்று திருமுருகாற்றுப்படையில் பாடியுள்ளார்.

## 2. கச்சியப்பர் கண்ட முருகன்

கந்தபுராணம் திருச்செந்தூருக்குத் தனியான சிறப்பு அளித்துள்ளது. தெய்வச்சிற்பி இத்திருக்கோயில் அமைத்தான். இங்கு வந்து எழுந்தருளி முருகப்பெருமான் சூரபத்மனுடன் போரிடப் படையெடுத்துச் செல்கிறார். இங்கு இருந்து வீரபாகு தேவர் தூது சென்று வந்து சூரபத்மனைப் பற்றி விரிவாகக் கூறுகிறார். சூரபத்மனை சேவலும் மயிலுமாக ஆட்கொண்டு திரும்பி வந்து முருகர் தங்கியது திருச்செந்தூர். ஆகவே தேவர்கள் முருகப்பெருமானை வழிபட்டதும் திருச்செந்தூர் தான். முருகப்பெருமான் சிவப்பெருமானை வழிபாடு செய்வதும் திருச்செந்தூர். முருகப் பெருமானை மிகவும் சிறப்பித்துப் போற்றியுள்ளார் கச்சியப்பர்.

## 3. அருணகிரிநாதர் கண்ட முருகன்

அருணகிரிநாதர் காலத்தில் திருச்செந்தூர் கலை உணர்வுக்கும், பக்தி உணர்வுக்கும் நிலைக்களமாக இருந்தது. அருணகிரிநாதர் செந்திலம்பதியை 'மங்கல மகிமை மாநகர்'' 'மாமதில் சூழ்தரு செந்தில் மாநகர்'', 'சுந்தரமான செந்தில்'' எனப் பாடியுள்ளார். செந்தில் முருகன் செந்தமிழ்த் தெய்வமாக அருணகிரி நாதருக்குக் காட்சி கொடுத்தார்.



நடனக்காட்சியும் மாசி 7ம் திருநாளன்று அலங்காரம் செய்யப்படுகின்றது.

**4. பகழிக் கூத்தர் கண்ட முருகன்**

இவர் ஆழ்வார் திருநகரியில் அவதரித்தவர், வீரவைணவர், பெருமாளைத் தவிர வேறு தெய்வத்தைப் பாடமுடியாது என்று வைராக்கிய உணர்வுடன் இருந்தார். அவருக்கு சூலைநோய் தந்து தன்னை பாட வைத்தார் முருகர் என்பர்.

பகழிக்கூத்தரும் செந்தமிழைச் செந்திலாண்டவனுடன் ஒப்பிட்டுப் பாடியுள்ளார். 'செந்தமிழ் மணக்கும் திருச் செந்தூர் வேலவனே'' என்று கூறி அழைக்கிறார். திருச்செந்தில் மாநகரை வலம் வருகிறார். திருவீதிகளைப் பார்க்கிறார். செந்திலாண்டவன் சந்நிதி சென்று முருகப் பெருமானை தரிசனம் செய்யும்போது 'என்னே தமிழ் மணம்'' என்று ஆச்சரியப் படுகிறார். ''தமிழ்க்கடவுள் முருகன்'' தமிழ் முனிவர் அகத்தியருக்கு உபதேசித்த தமிழ் இதுதானோ'' எனச் செந்தமிழ் மணக்கும் திருச்செந்தூரில் பகழிக் கூத்தர் தந்த தமிழ் திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்''. பகழிக் கூத்தர் திருக்கோயிலில் முருகனைச் செல்வக் குழந்தையாக - குழந்தை வேலனாகப் பார்க்கிறார். தமிழ்க்குழந்தை குமரனைத் தாலாட்டுகிறார். 'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு'' என்று கொஞ்சுகிறார்.

சிவக்கொழுந்து கைகொட்டும் அழகை ரசிக்கிறார். 'முருகா முத்தம் தருகவே'' என்று அழைத்து 'வருக வருக' என்று அழைத்தவர் 'வாராதிருக்க வழக்குண்டோ? என்று முருகனைக கேட்கிறார். முருகனோடு விளையாட அம்புலியை அழைக்கிறார். கைகொட்டி விளையாடும் குழந்தை முருகனைக்கண்டு சிற்றில் சிதைக்கலாமா? சிறுதேர் உருட்ட வாராய் என்று அழைக்கிறார். குமரன் பகழிக் கூத்தருக்கு வீரனாகவும் காட்சிதருகிறார். பகழிக்கூத்தர் கொண்டிருந்த வைணவ உறுதிப்பாடு சிதைந்தது. செந்தமிழ் பிள்ளைத்தமிழ் முருகனுக்கு கிடைத்தது.

''சிவனை நிகர் பொதியவரை முனிவன் அகம் மகிழ
இரு செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே''

என்று செந்தில்குமரனைக் கவியழைப்பது தமிழ் மக்களின் இதயங்களைக் காந்தமாக ஈர்த்துள்ளது. விண்ணவர்களுக்கும் அரியவித்தகர், செஞ்சொல் அடியார்களுக்கு எளிமைக்காரர் என்று அருணகிரிநாதர் போற்றிப்பாடிப் பரவியுள்ளார். கம்பனைப்போல் அருணகிரி நாதரும் தமிழ்மொழியை 'செஞ்சொல்'' என்றும் தமிழ்கொண்டு வழிபடும் அடியாருக்கு எளிய பெருமாள் என்றும் பாடியுள்ளார். அருணகிரிநாதர் இறைவன் (முருகன்) சன்னிதானத்திற்கு முன் நின்று அடியார்களுக்கும் ஆண்டவனுக்கும் பாடியுள்ளார் என்றும், இவர் பாடலைக் கேட்ட தமிழ் குமரன் தலையை ஆட்டி ரசித்தார் என்றும் கூறுவர். சண்முகப்பெருமாள் அருணகிரிநாதருக்கு முன்புறம் முருகனாகவும், பின்புறம் நடராஜர் திருக்கோலத்திலும் காட்சிதந்துள்ளார். அதனால் இன்றும் சிகப்பு சாத்தியில் முன்புறம் முருகன் திருக்காட்சியும், பின்புறம் நடராஜர் திரு

**5. குமரகுருபரர் கண்ட முருகன்**

ஸ்ரீவைகுண்டத்தில் ஐந்து வயதுவரை பேசா திருந்தது ஒரு குழந்தை. பெற்றோருக்கு ஊமைக் குழந்தையாகப் பிறந்துவிட்டதே என்று பெருங் கவலை. திருச்செந்தூருக்கு வந்து கந்தர் சஷ்டி விரத மிருந்தனர். குழந்தை பேசாவிட்டால் தம் உயிரை விடுப்பது என்று உறுதியுடன் கந்தர்சஷ்டி விரத மிருந்தனர். சண்முக விலாச மண்டபத்தில் முருகப் பெருமான் தம் திருக்கரத்திலிருந்த தாமரை மலரைக் காட்டிப் பாட அருள்புரிந்தார். பேசாதிருந்த ஊமைக் குழந்தை 'பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரியப் பாமேவும் தெய்வப் பழமறையும்'' என்று பாடத் தொடங்கி 122 கண்ணிகளையுடைய 'கந்தர் கலி வெண்பா' பாடியது. குழந்தை குமரகுருபரரின் முதல் பேச்சே கந்தர் கலிவெண்பாதான். முருகன் தன்னைப் பாடவேண்டும் என்று பேசாதிருந்த குழந்தையைப் பாடவைத்தார். இதைக் கேட்ட பெற்றோர்கள் செந்தி லாண்டவன் திருவருளை நினைத்து வியந்தனர். திருக்கோயிலைச் சுற்றி சுற்றிவந்து குழந்தையின் தந்தையார் சண்முகசிகாமணி கவிராயரும், சிவகாம சுந்தரியும் முருகப்பெருமான் திருமுன் வீழ்ந்து வணங் கினார்கள். குமரகுருபரரின் கந்தர்கலிவெண்பா ஒரு குட்டிக் கந்தபுராணமென்பர். திருமுருகாற்றுப்படை யைப்போல் கந்தர்கலிவெண்பா ஒரு பாராயண நூலாக பக்தர்களால் பாடப்பட்டு வருகிறது. பேசாத பிள்ளை பேசியது; ஒரு பிரபந்தம் தமிழுக்கு உரு வாகியது. இந்தக் கடற்கரையில் சித்தாந்த ஞான சமுத்திரத்தைக் காட்டிப் பக்திநெறியின் நுட்பமான செய்தி களையும் பாராயணம் செய்வதன் பலனையும் முருகப் பெருமானின் ஆறு திருப்பதிகளின் அற்புதங் களையும் அருட்திறத்தையும் காட்டியுள்ளது கந்தர் கலி வெண்பா நூல்.

**6. சுவாமிநாத தேசிகர் கண்ட சுவாமிநாதன்**

குமரகுருபரரின் காலத்தை ஒட்டியே சுவாமி நாத தேசிகரும் திருச்செந்தில் கலம்பகம் பாடியுள் ளார். 'மழை போல் முழங்கி அலையாழி சிந்தும் வளைவுமேவு செந்தில் நகரே'' என்று வர்ணித்தும் 'செந்தில் நகர் ஆள் பரமதேசிகா'' என்று அழைத்தும் போற்றுகிறார் சுவாமிநாத தேசிகர்.

**7. ஆதிசங்கரர் கண்ட ஆறுமுகன்**

ஆதிசங்கரர், காலடியில் அவதாரம் செய்தவர், ஆரியமொழியில் பல நூல்கள், பிரம்ம சூத்திரபாஷ் யம் என்ற பேருரையை அருளியவர். உலகமுழுதும் போற்றும் பிரம்மஞானி, சங்கரர்மீது பொறாமை கொண்ட அவிநவகுப்தன் என்ற புலவன், அபிசார மந்திரத்தால் காசநோயை சங்கரருக்கு ஏற்படுத்தி னான். சங்கரர் அந்த நோயால் பெரிதும் அவதியுற் றார். பல தலங்களை தரிசித்து திருக்கோகர்ணம் சென்றார். இறைவன் சங்கரர் கனவில் எழுந்தருளி, ''நீ திருச்செந்தூர் சென்று என்மைந்தன் குமரனை வணங் கியபின் இந்த நோய்தீரும்'' என்றார். அவ்வண்ணமே ஆதிசங்கரர் திருச்செந்தூர் வந்து செவ்வேள் குமர னைத் தரிசித்து நோய் நீங்கப் பெற்றார்.

'உயிர் மங்கு பொழுதின் கண் உன்னை
நான் நினையேன்.
ஓ செந்திலாய் என்கிலேன்; கைகள் குவியேன்
அயர்கின்ற அவ்வேளை கைவிட்டிடேல்; என்
ஐயா உனக்கே கை அடையாகினேன்''

என்று அவர் பாடியபோது அர்ச்சகர் செந்தில் பெரு மானின் இலைவிபூதி கொண்டுவந்து தருகிறார்.

அதனை மந்திரம் ஓதி அணிய சங்கரரின் நோய் தீர்ந்தது.

''கண்டால் நின் இலை நீறு கைகால் வலிப்புக்
காசம், கயம் குட்டம், முதலாம் நோயும்
விண்டோடுமே பூதப்பைசாசம் யாவும்.
வினையாவுமே செந்தில் அமர் தேவதேவே''

தாம் பெற்ற பேற்றினை உலகமறிய பாடிப்பரவச மடைந்தார். இன்பத்துன்பங்கள் அவரவர் செய்த வினை வழியே வருகின்றன. செந்தில் முருகனரு ளால் இருள்சேர் இருவினையும் சேராமல் வேண்ட லாம் என்று செந்திலாண்டவனைப் போற்றுகிறார்.

''மயில் போற்றி, வேல் போற்றி மறியாடு போற்றி
வன் காற்படைச் சேவலும் போற்றி; நந்தூர்
உயிர் வெண்திரை சிந்து போற்றி; முருகேசன்
உபயப் பதம் போற்றி; உயர் செந்தில் போற்றியே;

என்று தாம் கண்ட செந்தில் முருகனது அருட் காட்சியை நமக்கும் காட்டுகிறார். ஆதிசங்கரர் காட் டிய ஆறுமுகனை நாமும் போற்றுவோம்! வாழ்வில் உயர்வோம்.

★★★

# "துச்சான செய்திடினும் பொறுப்பர் அன்றே"

- செல்வி சுப்புலட்சுமி
பொருளியல் இரண்டாம் ஆண்டு, கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி, திருச்செந்தூர்.

*(திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் நம் ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப. தலைமையில் நடைபெற்ற ''பன்னிரு திருமுறை ஆய்வரங்''கில் வழங்கப்பெற்ற கட்டுரை ஆகும் இது.)*

''தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை'' என்ற மாணிக்க வாசகரின் திருவாக்கிற்கேற்ப தழைத்த நம் சங்கத்தமிழ், சமயத் தமிழாகவும் மலர்ச்சியுற்றது. சமயங்கள் பல நம் பாரதத்தை ஆண்டாலும், அனலாலும், புனலாலும், காலத்தாலும் வென்ற சமயமாய் தோன்றியது சைவ சமயமேயாகும்.

இச்சமய குரவர்கள் அன்பாலும், பண்பாலும், மெய்யாலும், உயிராலும் பாடி அருளியவையே திருமுறை எனப் பெயர் பெற்றன. பன்னிரு திருமுறையாக வகுக்கப்பட்டதில் ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பாவை பாடிய ஒன்பதின்மருள் ஒன்பதாவதாக இடம் பெற்றவரே வேணாட்டிகள். ''துச்சான'' ... எனத் தொடங்கும் இவரது பாடல் சிறப்பினையும், இறைவனின் அருள் பெருமையினையும் குறித்துக் கூற முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

### வேணாட்டடிகள் வரலாறு

வேணாட்டடிகள் தென்பாண்டி நாட்டிற்கும், சேர நாட்டிற்கும் இடையில் உள்ள ''வேணாடு'' என்னும் தலத்தில் அவதரித்த பெருமகனார். இவர் வேணாட்டைச் சார்ந்தவராதலால் மக்களால் அன்புடன் வேணாட்டடிகள் என அழைக்கப்பட்டார்.

இவர் பாடியது திருவிசைப்பா மட்டுமே ஆகும். இது ''கோயில்'' என்னும் சிதம்பரத்தைப் பற்றியது. கோயில் என்பது சிதம்பரத்தை மட்டுமே குறிக்கும். சைவர்களின் கோயில் சிதம்பரமாகும். இவர் தன்னை நாயினும் கீழாகவும், இறைவனை வானினும் அரியதாகவும் எண்ணிப் பாடுகிறார். எட்டாம் திருமுறை அருளிச் செய்த மாணிக்கவாசகப் பெருமான் போலவே இவர் சிவபெருமானின் மீது அளவற்ற பக்தியும், அன்பும் கொண்டவர் என்பது புலனாகிறது. இவர் அந்நாட்டு அரச மரபில் தோன்றித் துறவு பூண்டவர்.

சைவ சமயத்தைச் சார்ந்தவரும், அதன் பெருமையைப் பாரெங்கும் பரப்பியவருமான வேணாட்டு அடிகள் ஒன்பதாம் திருமுறையில் 10 பாடல்களைச் சிறப்பாகப் பாடியுள்ளார். இவரது பாடல்கள் ஒவ் வொன்றும் பக்திரசம் சொட்டச் சொட்டப் பாடப்பட்டுள்ளது.

பாடிய பாடல்கள் பத்தே ஆயினும் அவரது பாடல்கள் ஒவ்வொன்றும் பக்தி உணர்வைத் தூண்டும் வல்லமை உடையது. பாடல்கள் ஒவ்வொன்றும் கருத்தாழம் மிக்கது. ''மூர்த்தி சிறியது, கீர்த்தி பெரியது'' என்பது போல் பாடிய பத்துப் பாடல்களும் தரணி புகழும் வண்ணம் அமைந்துள்ளன.

### துச்சான செய்திடினும் பொறுப்பர் அன்றே

''துச்சான செய்திடினும்
பொறுப்பரன்றே ஆளுகப்பார்
கைச்சாலும் சிறுகதலி
இலைவேம்பும் கறிகொள்வார்
எச்சார்வும் இல்லாமை
நீயறிந்தும் எனது பணி
நச்சாய்காண்: திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே!''

இப்பாடலில் வேணாட்டிகள்,

துடுக்குத்தனமான (தவறான) செயல்களை நாம் செய்தாலும், கருணையே வடிவான இறைவன் இவற்றை மறந்து, நம்மையும் மன்னித்து நமக்கு அருள்பாலிக்கிறான். எவ்வாறு என்றால் கசந்தாலும், இளம் வாழைக்காய், இளம் வேப்பிலை இவற்றை விரும்புவர்கள் கறி செய்வதற்கு உபயோகிப்பார்கள். அதுபோல, அடிமையாகிய நம்மை விரும்பும் இறைவன் நாம் செய்யும் தவறுகளைப் பொறுத்து, நம்மை நற்கதி பெறச் செய்வார் என்று இப்பாடலில் வேணாட்டடிகள் சிவபெருமானின் தன்மையினை அழகுற கூறுகின்றார்.

இப்பாடலினை நோக்குகையில் தாயுமானவர் பாடிய,



''கல்லால் எறிந்தும் கைவில்லால் அடித்தும்
கனிமதுரச்
சொல்லால் துதித்தும் நற்பச்சிலை தூவியும்
தொண்டரினம்
எல்லாம் பிழைத்தனர் அன்பற்ற நான்இனி
ஏதுசெய்வேன்
கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கண்
குருமணியே.''

எனும் பாடல் வேணாட்டடியாரின் பாடல் கருத்திற்கு அரணாக நிற்கின்றது.

இறைத்தன்மையாக ''பொறுத்து அருளலே'' மிகையானது எனச் சமயங்கள் பறைசாற்றுகின்றன. இதற்கேற்ப முக்கண்ணனாகிய இறைவன் தன்னைப் 'பித்தனே' என்று பாடிய சுந்தரரையும் தடுத்து, ஆண்ட பெருமைக்கு உரியவர் ஆவார். இத்துடன் மட்டுமின்றி அவர் அன்பிற்கு அளவுமில்லை, கரையு மில்லை, அன்பு வயப்பட்டவர்கள் தாங்கள் செய் கின்ற செயல்களே பொருத்தமுடையன என எண் ணும் மனப்பாங்குடையராய் இருப்பர். இம் மனப் பாங்கினை தன் உள்ளத்தில் ஏற்று, அடியார்கள் செயல்களையும் பொறுத்து அருளியமைக்கு,

1. கல்லால் எறிந்து வழிபட்டு, அருள்பெற்ற சாக்கிய நாயனார்.
2. கை வில்லால் அடித்து வரம் பெற்ற அர்ச்சுனன்
3. சொல்லால் அடித்து முக்தி பெற்ற நக்கீரர்

ஆகிய இவர்களது துச்சான செயல்களைக் குறிப்பிடலாம்.

1. கல்லால் எறிந்து வழிபட்டு அருள்பெற்ற சாக்கிய நாயனார்

'திருச்சங்க மங்கை' என்னும் பதியில் வேளா ளர் குலத்தில் ஒரு பெரியார் அவதரித்தார். பௌத்த மதக் கருத்துக்களையே தம் வாழ்வில் மேற்கொண்ட அவர் முன் செய்த தவத்தின் திறத்தாலே சிவநெறி யொன்றே உண்மை நெறி என்பதனை,

''செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங்
கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள்
எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை
என
உய்வகையாற் பொருள் சிவன் என்று அருளாலே
உணர்ந்தறிந்தார்.''

மேலும்,

ஒருவன் எந்நிலையில் நின்றாலும், எவ்வேடங் கொண்டாலும், சிவபெருமானுடைய திருவடி களை மறவாதிருத்தலே உறுதிப் பொருள் என்றும், அப்பெரியார் துணிந்தார். அதனால் தாம் முதலில் மேற்கொண்டிருந்த சாக்கியர் வேடமாகிய 'துவ ராடை' முதலியவற்றை நீக்காமலேயே, சிவபெருமா னிடம் பேரன்பு கொண்டு அவரை மறவாத நிலை யில் சிறந்து விளங்கினார்.

''எந்நிலையில் நின்றாலும் எக்கோலங்
கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்
என்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாத தூயசிவன்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலை
நிற்பார்.''

என்று திருத்தொண்டர் புராணம் கூறுகிறது.

ஒருநாள் சாக்கியர் வேடந்தாங்கிய இப்பெரி யார் ஒரு வெளியிடத்திலே சிவலிங்கத்தினைக் கண்டு மனதில் பெருமகிழ்ச்சி கொண்டு தாம் செய் யும் செயல் இன்னதென்றே அறியாராய் அருகில் கிடந்த ஒரு கல்லினைக் கண்டு அதனையே மலராக அன்பினில் விரைந்த பதைப்புடனே எடுத்து அச் சிவலிங்கத்தை அருச்சித்தது போல எறிந்தார். தம் குழந்தைகள் தம்பால் கொண்ட அன்பினால் இகழ் வாகிய செயல்களைச் செய்தாலும், பெற்றோர்கள் கண்டு மகிழ்வர். அவர்களுடைய மகிழ்ச்சியைக் கண்ட குழந்தைகளுக்கும் இன்பமே உண்டாகும். அது போன்றே சிவபெருமான் சாக்கியர் வேடப் பெரியா ரின் கல்லெறி செய்கையினைக் கண்டு மகிழ்ச்சியே அடைவராயினர். நல்லோராகிய சாக்கியப் பெரியார் அன்பினாலே விரும்பிச் செய்த அச்செய்கையினை

உண்மை உணராதார் அவர் எறிந்தது கல் என்று வழங்குவர். அஃது சிவபெருமானுக்கு மலரே ஆகும், ஆயின் இதனை,

''கல்லாலே எறிந்ததுவும் அன்பான படிகாணில்
வில்வேடர் செருப்படியுந் திருமுடியின் மேவிற்றால்
நல்லார்மற் றவர்செய்கை அன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல்லென்பார் அரனார்க்கு அஃது
அலராமால்''

எனும் பாடல் தெளிவுற விளக்குகிறது.

**2. கைவில்லால் அடித்து வரம் பெற்ற அர்ச்சுனன்**

ஒருமுறை தருமனின் சகோதரனாகிய அர்ச்சுனன் தாங்கள் மேற்கொள்ளும் யுத்தத்தில் வெற்றி பெற 'பாசுபதாஸ்திரத்தை' வேண்டி சிவனை நோக்கித் தவம் இருந்தார். அப்போது அர்ச்சுனனது வில்லாற்றலை உலகிற்கு காட்ட எண்ணிய எம்பெருமான் வேடுவனாயும், அவரது நந்தி பன்றியாயும் வேடம் கொண்டு அர்ச்சுனன் தவமிருக்கும் இடம் வந்தனர். அப்போது பன்றி கனத்த ஒலியுடன் ஓடிவரவே தவம் கலைந்த நிலையில் அர்ச்சுனன், தனக்கு இடையூறு செய்யவே இப்பன்றி வருகின்றது என எண்ணி, அம்பினைத் தொடுத்து அதன் குரல்வளை நோக்கி அடித்தான். அக்கணப் பொழுதிலே வேடவனும் அம்பினை அதன் குதம் நோக்கி அடித்தான். பன்றி இறந்து விடவே இருவரும் தன்னால்தான் இறந்தது என்று வாக்குவாதம் புரிந்தனர். பின்னர் அர்ச்சுனன் வேடுவனை இவ்விடத்திலேயே இரு என்று கூறிவிட்டு அருகேயிருந்த ஆற்றங்கரையில் நீராடி, அங்கே சிவலிங்கத்தை பிரதிட்டை செய்து, கான மலர்களை தூவி வழிபட்டான். அவன் இட்ட மலர் யாவும் வேடுவன் பாதத்தில் இருந்தமையைக் கண்டு

''செய்யும் தவஞ்சற்றும் இல்லாத நானுன்
திருவடிக்கே
கொய்யும் புதுமலரிட்டு மெய்யன்பர் குழாத்துடனே
கையும் சிரமிசைக் கூப்பிநின்றடிக் கசிந்துருகி
உய்யும் படிக்கருள் செய்வதென்றோ புலியூர்
அத்தனே.''

எனும் தாயுமானவர் மொழிக்கேற்ப பரவி நின்ற அர்ச்சுனனுக்கு அவன் விரும்பிய அஸ்திரத்தை அருளிய அருளாளன் முக்கண் முதல்வனே ஆவான்.

**3. சொல்லால் அடித்து முக்தி பெற்ற நக்கீரர்**

''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே.''

என்று இறையனார் பாடிய பாடலில் பொருட்குற்றம் கூறியவர் நக்கீரர். கீரனின் கூற்றைக் கேட்டு, அவர் தன்னை அறியும் வண்ணம் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டினார் இறைவன். கீரன் வந்தவர் மூவுலகிற்கும் தலைவனான இறைவனே என்பதை உணர்ந்தாலும், ''நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே'' என்று வாதிட்டார். வெகுண்ட இறைவன் தம் நெற்றிக் கண்ணைத் திறந்து அவரை எரித்தார். இருப்பினும் அவரது மெய்யுணர்வையும், புலமையையும், பக்தியையும் எண்ணி பொற்றாமரைக் குளத்தில் மீண்டும் அவரைத் தோன்றச் செய்து, பாரெங்கும் அவரது பாடல் மணம் பரவச் செய்தார்.

இங்ஙனம் அடியார்கள் துச்சான செயல்களை செய்தபோதும் இறைவன் பொறுத்து அருள்புரியும் வள்ளலாய் திகழ்வதை அறியமுடிகிறது. மேலும்,

''நின்று நினைந்து இருந்துகிடந்து
எழுந்து தொழும் தொழும்பானேன்.''

என்று வேணாட்டடிகள் இறைவனை எண்ணிப் பாடும் பொழுது,

''ஒன்றியொரு கால்நினையாது
இருந்தாலும் இருக்கவொட்டாய்''

என்று ஐம்புலன்களும் ஒன்றுபட்டு உன்னை நினையாமல் இருந்தாலும், என்னை அவ்வாறு தவறான வழியில் செல்லவிடமாட்டாய் எனப் பாடுவதன் வாயிலாக இறைவனின் அருள்தன்மையை உணர முடிகின்றது.

மேலும்,

வேணாட்டடிகள்.

''இடுவதுபுல் ஓர் எருதுக்கு
ஒன்றினுக்கு வையிடுதல்
நடுஇதுவோ திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே''

என்று ஓர் எருதினுக்கு புல்லும், மற்றோர் எருதினுக்கு வைக்கோலும் கொடுப்பது முறையோ? எனச் சாடிய போதும் இறைவன் வெகுளவில்லை.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''

என்ற திருமந்திர ஒலிக்கேற்ப சிவன் அடியார்கள் தம் உள்ள அன்பினால் செய்கின்ற செயல்கள் யாவும் சிவபெருமானுக்கு உகந்த செயல்களாகவே உருக்கொள்கின்றன. உலகோர் கண்களுக்கு துச்சமான செயல்களாய்க் காணப்பட்ட போதிலும் அடியாருக்கு சிவபெருமான் அருள்நோக்கம் பாலித்தருளி அமர வாழ்வினை அளித்தமை இதுகாறும் கூறிய செய்திகளினால் புலனாகின்றது அன்றோ!

# வினாவும் விளக்கமும்

– பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A., D.Litt., Ph.D.

**வினா 25 : அம்பிகைக்கு 'கடும்பாடி அம்மன்' 'துளுக்காணத்து அம்மன்' ஆகிய பெயர்கள் எப்படித் தோன்றின?**

**விளக்கம் :** 'மணித்தீவு' என்ற அம்பிகையின் உலகில் கடம்ப வனங்கள் நிறைந்திருக்கும். அங்கு ராஜமாதங்கி என்ற சியாமளா தேவி உலவி நிற்பாள். அவளை, 'மந்த்ரிணி' என்றும் அழைப்பர். ஆதி பராசக்தியின் அரசாட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தும் அமைச்சர் பதவியில் இருப்பதால் சியாமளா தேவியை ராஜமாதங்கி என்றும் 'மந்த்ரிணி' என்றும் அழைத்தனர்.

யாழிசைக்கும் பாணர் குலத்தில் மதங்கர் என்ற முனிவரின் பெண்ணாகத் தோன்றியதால் சியாமளா தேவிக்கு 'மாதங்கி' என்ற பெயரும் ஏற்பட்டது. மதங்கரின் பெண்ணாகத் தோன்றிய பொழுதும் அவள் கடம்பவனத்தில் உலவினாள்.

''கடம்பாடவியிடை பண்களிக்கும் வீணையும் பயோதரமும் கொண்டு.... மதங்கர் குலப் பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டி'' என்ற குறிப்பு அபிராமி அந்தாதியில் வருகிறது.

மதுரை மீனாட்சியும் ராஜமாதங்கி என்ற சியாமளா தேவியின் அம்சமே என்பர். அவள் உறையும் மதுரை நகருக்குக் 'கடம்ப வனம்' என்ற பெயரும் உண்டு.

காசி விஸ்வநாதர், அண்ணாமலையார் போன்ற மூர்த்தங்களை பக்தர்கள் அவரவர் பகுதியில் உள்ள திருக்கோயில்களில் வைத்து வழிபடுகின்றனர் அல்லவா? அதுபோல் மதுரை மீனாட்சியாகிய கடம்பா-அடவி-அம்மனைத் தங்கள் பகுதியில் வைத்து வழிபட்டனர். கடம்பா அடவி அம்மன் என்ற பெயரே 'கடும்பாடி அம்மன் என்றாகி விட்டது.'

கிராமங்களில் சோலைகள் நிறைந்த பகுதியில் நிறுவிய அம்மன் கோயில்களில் எழுந்தருளிய அம்மனை 'துளிர்-கா-வனத்து அம்மன்' என்று அழைத்தனர். அதுவே 'துளுக்காணத்தம்மன்' ஆயிற்று.

ஆண்களும் 'துளுக்காணம்' என்று பெயர் வைத்துக் கொள்கின்றனர். துளிர்-கா-வனம் என்பதே 'துளுக்காணம்' ஆகிவிட்டது!

**வினா 26 : கல்வித் தெய்வமாகிய கலைமகளைப் பற்றி அதிக நூல்கள் இயற்றப்படாததன் காரணம் என்ன?**

**விளக்கம் :** வடமொழி, தென்மொழி இரண்டிலுமே கலைமகளுக்கென்று தனிநூல்கள் அதிகமாக இயற்றப்படவில்லைதான்!

கம்பர் இயற்றிய சரசுவதி அந்தாதியில் முப்பது பாடல்கள் உள்ளன. குமரகுருபரர் இயற்றிய சகலகலாவல்லி மாலையில் பத்துப் பாடல்கள் உள்ளன.

அனைத்து நூல்களையுமே கலைமகளின் வடிவமாகக் கருதிப் போறறினர். அத்துடன் விநாயகர் காப்புச் செய்யுளை அடுத்துக் கலைமகள் காப்பும் இயற்றினர்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் வெளியீடான 'மகாசரஸ்வதி' என்ற கலைமகள் குறித்த கலைக் களஞ்சியம் ஒன்று உள்ளது. அதனுள் கலைமகள் தொடர்பான வேத-சாஸ்திர-ஆகம மந்திரங்களும் வடமொழி தென்மொழிப் பாடல்கள் பலவும் இடம் பெற்றுள்ளன. பல வடிவங்களிலான கலைமகள் படங்களும் ஆங்காங்கே இடம் பெற்று அழகு செய்கின்றன.

கலைமகள் பற்றிய பல செய்திகள் இதிகாச புராணங்களிலும் கவிஞர் பெருமக்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிக் குறிப்புக்களிலும் கிடைக்கின்றன. எனினும் ''எல்லா நூல்களும் கலைமகள் வடிவமே'' என்ற கொள்கையினால்தான் அவளுக்கென்று அதிக நூல்கள் இயற்றப்படவில்லை.

**வினா 27 : 'அஷ்ட லட்சுமிகள்' என்று திருமகளுக்கு எட்டு வடிவங்கள் இருக்கின்றன. அதுபோல் கலைமகளுக்கும் உண்டா?**

**விளக்கம் :** 'வசினி' முதலான எட்டு வாக்தேவதைகள் உள்ள செய்தியை இலலிதாசகஸ்ரநாம உரையின் வழியே அறிகிறோம்.

கலைமகளை மூல சரஸ்வதி, மகாசரஸ்வதி, வாக்தேவி, பாரதி, வாணி போன்ற பல பெயரிட்டு அழைத்து மகிழ்ந்தனர்.

தமிழில் நாமகள், சொற்கிழத்தி போன்ற பெயர்கள் உள்ளன.

அம்பிகையின் யந்திரமான ஸ்ரீசக்கரத்தில் ஒன்பது ஆவரணங்கள் (சுற்றுக்கள்) உள்ளன. அவற்றின் உட்சுற்றின் நடுவே பிந்து மண்டலத்தில் அன்னை வீற்றிருக்கிறாள். வாக்தேவிகள் எண்மர் (அஷ்ட சரஸ்வதிகள்) மற்ற எட்டுச் சுற்றுக்களிலும் எழுந்தருளுகின்றனர்.

1) வசினி
2) காமேச்வரி
3) மோதினி
4) விமலா
5) அருணா
6) ஜயினீ
7) ஸர்வேச்வரி
8) கௌளினீ

இந்த எண்மர்தான் வாக்தேவிகள் என்று அழைக்கப்படுபவர்கள். இவர்கள் அம்பிகையின் ஆயிரம் திருப்பெயர்களையும் எடுத்துரைத்துப் பாடினார்கள். அவை ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் என்ற தோத்திர நூலில் அடங்கியுள்ளன.

ஆதிசங்கரரின் காலத்தில் சரஸவாணி என்பவள் சரஸ்வதியின் அம்சமாகத் தோன்றியிருந்தாள். ஆதிசங்கரர் அவளைத் தமது மந்திர சக்தியால் தன்னுடன் அழைத்து வந்து சிருங்கேரியில் சாரதாவாக எழுந்தருளச் செய்தார்.

அங்கு, துங்கா நதிக்கரையில் ஓரிடத்தில் பூரண கர்ப்பமாக இருந்த ஒரு தவளைக்குப் பாம்பொன்று தனது படத்தினால் குடைபோல் நிழல் தந்து காத்தது. பகையான இரண்டு உயிர்கள் ஒன்றுக்கொன்று உதவியாகவும் ஆதரவாகவும் இருந்தன. அந்த இடமே தேவி சாரதை நிலைத்திருக்க உகந்த இடம் எனத் தேர்ந்தார் சங்கரர்.

கலைமகளின் அருள் பெற்ற புலவர்களும் கலைஞர்களும் தங்களுக்குள் பகைமை பாராட்டுதலையும், போட்டி-பொறாமைகளையும் தவிர்த்தல் வேண்டும். ஒருவருக்கொருவர் ஆதரவாகவும் அரவணைப்பாகவும் இருத்தல் வேண்டும். இந்த உயர்ந்த கருத்தை உணர்த்துவதே பாம்பு தவளைக்கு நிழல் கொடுத்த வரலாறு.

பருத்தியூர் சந்தன மாரியம்மன் திருக்கோயிலில் 'பேச்சம்மன்' என்ற பரிவார தேவதை இருக்கிறாள். இவள் ஒரு குழந்தையைத் தன் காலில் மிதித்துக் கொண்டும், மற்றொரு குழந்தையின் குடலைக் கிழித்துக் கொண்டும் நிற்கிறாள். அச்சந்தரும் கோலம்!

பேச்சுக்கு அதிதேவதையான கலைமகளின் அம்சமானதால் இவளைப் 'பேச்சம்மன்' என்றனர்.

ஊர் மக்கள் அனைவரையும் தனது குழந்தைகளாகக் கருதிக் காப்பவள் பேச்சம்மன். அதே நேரத்தில் அவர்கள் தவறு செய்யும் பொழுது தனது குழந்தை என்ற தயவு - தாட்சண்யம் காட்டாமல் தண்டிப்பவள் என்ற அச்சத்தால் ஊர்மக்கள் பொய்யுரைத்தல், புறங்கூறல் முதலானவற்றைத் தவிர்த்துத் தங்களுக்குள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

இன்னும், ஊர் வழக்குகள் காவல்துறைக்கோ நீதிமன்றத்துக்கோ செல்லாமல் சந்தனமாரி - பேச்சம்மன் முன்னிலையில் சுமுகமாகத் தீர்க்கப்படுகின்றன.

இவ்வாறு திருமகளைப் போலவே கலைமகளும் ஆங்காங்கு பல்வேறு வடிவங்களில் இருந்து அருள்பாலித்து வருகிறாள்.

**வினா 28 : திருமால் நரகாசுரனை வதம் செய்த நாளாகத் தீபாவளி கொண்டாடப்படுகிறது. அன்று சிவத்தலமான காசிக்குச் சென்று கங்கையில் நீராடுவதும் தீபாவளியைக் 'கங்காஸ்நானம்' என்பதும் ஏன்?**

**விளக்கம் :** கிருஷ்ணாவதாரக் காலத்துக்கு முன்பிருந்தே கங்காஸ்நானம் இருந்ததென்று கூறுகிறார் டாக்டர் சிவப்பிரியா அவர்கள்.

தில்லிப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அந்த ஆராய்ச்சிப் பேராசிரியர் ஆகாய கங்கை பூமிக்கு வந்த திருநாள்தான் தீபாவளி என்கிறார். பாரத பூமி கங்கையின் வரவால் வளம் பெற்று வாழத் தொடங்கிய நல்ல நாளை மக்கள் கங்கைக் குளியலுடன் கொண்டாடுகின்றனர்.

மேலும் 'சதுர்த்தசி' என்ற திதி சிவவழிபாட்டுக்கே உரியது. மாத சிவராத்திரிகளும், மகாசிவராத்திரியும் சதுர்த்தசியில் தான் வருகின்றன. அந்த வகையில், சிவபெருமான் ஆகாய கங்கையை பூவுலகுக்கு அளித்த நன்னாள் ஐப்பசி சதுர்த்தசி நாளாகும்.

ஆகவேதான், காசிக்குச் சென்று கங்கையில் நீராடுதல், அன்ன பூரணி விழா எடுத்தல் ஆகிய வழக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

திருமால் நரகாசுரனை வதம் செய்தது முதல் அந்த வரலாறும் தீபாவளிப் பண்டிகையின் ஐதீகமாகியது. இவ்வாறு விளக்குபவர் பேராசிரியர் டாக்டர் சிவப்பிரியா அவர்கள்.

★★★

# காலத்தை வென்று வாழும் சிறுத்தொண்டர்!

- முனைவர் கா.பெ. சந்திரசேகரன்

திருத்தொண்டருள் ஒரு சிறுத்தொண்டர்! பெரியபுராணத்தில் அவரே பெருந்தொண்டர்! ஆம்! இறைவனே பயிரவ வடிவில் அவரிடம் நேருற வந்து ''நீரோ பெரிய சிறுத்தொண்டர்?'' என்று விளிக்கப் பெற்றவரல்லவா அவர்!

**காரணப்பெயர்**

உருவத்தில் மிகப் பெரிய யானையானது உள்ளத்தால் குழந்தைகளிடமும் குழையும் பணிவைப் போல, மாபெரும் படைத்தலைவராய் விளங்கிய பரஞ்சோதியார், சிவத்தொண்டின் பணி மேற்கொண்ட பின்

''மேதகையார் அவர் முன்பு மிகச்சிறியராய்
அடைந்தார்
ஆதலினால் சிறுத்தொண்டர் என நிகழ்ந்தார்
அவனியின்மேல்''

என்று காரணப்பெயர் பெற்றவரன்றோ சிறுத்தொண்டர்!

**ஞானசம்பந்தருக்கு நண்பர்**

இயற்பெயர் பரஞ்சோதி; காரணப்பெயர் சிறுத்தொண்டர்; பெருமைகளால் திருத்தொண்டர்! சேக்கிழார் வாக்குப்படி அவர், 'பண்புமிக்கவர்'! 'பரிவு கொண்டவர்!' பயிரவ வடிவு கொண்ட கயிலை நாதன் விருப்பப்படி 'வரும் அன்பின் வழி நிற்பீர்!' என்ற திருத்தொண்டில் திளைத்தவர்! திருஞான சம்பந்தரை இருமுறை தம் இல்லத்திற்கு அழைத்து உபசரித்தவர்; ஞான சம்பந்தர் 'நண்பருளி' அவர்தம் பதிகங்களில் இடம்பெற்றவர்!

**பணிப்பெண்ணுக்கும் பதமுத்தி**

எவரும் செய்ய வியலாத செயற்கருஞ்செயலைச் செய்தவர் சிறுத்தொண்டர்; அதனால், எவரும் எளிதில் பெறவியலாத பதமுத்தியைப் பெற்றார்! சித்தமெலாம் எமக்குச் சிவநெறியே என்று நித்தம் அறம் புரியும் 'நீர்மையினில் நிலைநின்றார்.' இறைவன் தன் குடும்பத்துடன் தோன்றி துய்யநற் காட்சி தந்து தொண்டரின் குடும்பத்தார்க்கும் முத்தி தந்தார்.

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பது முதுமொழி! சிறுத்தொண்டர் வீட்டுப் பணிப் பெண்ணுக்கும் தொண்டருடன் பதமுத்தி கிடைத்தது என்பது நிலைத்தமொழி!

**உணவிடுதல் தொண்டு**

வடலூர் வள்ளலார் அண்மைக் காலத்தில் நிகழ்த்திய புதுமையைக் கண்டோம்! அவரின் அன்னம் பாலிப்பை ஆண்டுதோறும் தைப்பூச நன்னாளில் சுவைக்கிறோம்! 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய' வள்ளலார்

''வீடுதோறிரந்தும் பசிஅறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தவர்''

அதனால் சத்திய தருமச் சாலையை உருவாக்கி உணவு வழங்கினார்.

சிறுத்தொண்டர் 1350 ஆண்டுகளுக்கு முன்பு செங்காட்டங்குடியில் மண்டபம் அமைத்து உணவிடும் திருத்தொண்டைத் தொடங்கினார்.

''நறை இதழித்திருமுடியார் அடியாரை நாள்தோறும்
முறைமையினில் திரு அமுது முன் ஊட்டிப்
பின் உண்ணும்
நிறை உடைய பெருவிருப்பால் நியதி ஆக்க்
கொள்ளும்
துறைவழுவாவகை ஒழுகும் தூயதொழில்
தலைநின்றார்''

அன்று அவர் தொடங்கிய அமுது படையல் நாளிது வரை தமிழகத்தின் பல பகுதிகளில் நிகழ்வதைக் காண்கிறோம்!

வள்ளலார் செல்வர்களிடம் கேட்டு நிலமும் பொருளும் பெற்று ஏழைகளுக்காக அன்னம் பாலிப்பைத் தொடங்கினார்.

காந்தியடிகள், வினோபா, ஜெயப்பிரகாஷ் நாராயண் வரை, பூதான, கிராமதான இயக்கங்களைத் தொடங்கி ஏழை எளியவர்களின் துயர் துடைத்தனர், இவை இக்கால நிகழ்வுகள்.

சிறுத்தொண்டரின் அமுது படையலுக்காக சோழப் பேரரசுகள் முதல் சாதாரண மக்கள்வரை வழங்கிய நிவந்தங்கள் 'திருவோட்டுக்கட்டளை' என்று பெயர் பெற்றன.

### காலத்தை வென்று வாழும் தொண்டர்

சிறுத்தொண்டர் உருவத்தால் மறைந்தாலும் அவர் உள்ளம் விரும்பிய தொண்டும் குறிக்கோளும் மறையவில்லை. பயிரவ வடிவில் வந்த இறைவனே அவரை,

''தொண்டானார்க்கு எந்நாளும்
சோறிடும் திருத்தொண்டர்!''

என்று அழைத்ததாகச் சேக்கிழார் பாடுகிறார்!

காலத்தை வென்று வாழும் சிறுத்தொண்டர் அன்று மகேசன் தேவையை நிறைவேற்றினார். ஆனால் மக்கள் தேவை இன்னும் முழுமைபெறவில்லை; அதனால் அவர் ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் பரணி நந்நாளில் பவனி வருகிறார்! அன்புநெறி தழைத்தோங்க அன்பர்களுக்கு அமுது படைக்கிறார்! அன்றிரவே நிகழ்த்தப்பெறும் சிறுத்தொண்டர் நாடகத்தில் தாம் செய்த செயற்கருஞ் செயலை மக்களுக்கு உணர்த்துகிறார்! ஆண்டவனே நிகழ்த்திய அந்த நாடகம் இன்பியலில் தானே முடிகிறது!

சிறுத்தொண்டர், தமக்கென வாழாப் பிறர்க்கு உரிமையாளர்! அவர் 'உண்டி முதற்றே உலகு' என்னும் மானுட வாழ்வின் அடிப்படைத் தேவையை உலகுக்கு உணர்த்தியவர்; அதனால் அவர் வாழும் நாளிலேயே வள்ளலார் பட்டம்பெற்றார்! பக்தி இயக்கப் பிரவாகத்தில் தொடங்கிய அவரின் ஜீவநதி இன்னும் பாய்ந்து கொண்டுதான் இருக்கிறது. மரணமிலாப் பெருவாழ்வில்தான் அவர் மகிழ்ந்திருக்கிறார்!

அவர், சம்பந்தர் பதிகங்களில் இடம் பெற்றதால் சாகா வரம் பெற்றவர்! வாதாபி வெற்றியால் வரலாற்றில் நிலைத்தவர்! அவர், பிற்காலப் புலவர்களின் பாமாலைகளில் மணம் வீசுகிறார்! பிறமொழி நூல்களில் பெருமை பெறுகிறார்! அவர் எழுப்பிய கணபதீச்சரக் கோயிலில் காட்சி தருகிறார்! அவர் பெயரால் அமைத்த சிறுத்தொண்டர் மண்டபத்தில் ஆண்டுக்கொரு நாள் வந்து அமுது படைக்கிறார்! சிற்பங்களில் அற்புதம் புரிகிறார்! செப்புத்திருமேனிகளில் சிரிக்கின்றார்! கணக்கில்லாக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றார்! ஆண்டுதோறும் நடைபெறும் பட்டி மன்றங்களில் விவாதப்பொருளாக விமரிசிக்கப் படுகிறார்.

### பாமாலைகள்

பெரியபுராண நாயன்மார்களுள் சமயக்குரவர் நால்வரைப் போல, சமகால - பிற்காலப் புலவர்களால் பாராட்டப்பெற்ற நாயனார் சிறுத்தொண்டர். சேக்கிழார் காலத்தில் சிறுத்தொண்டரின் புகழ் தென்னகம் முழுவதும் பரவி இருந்தது.

''கீர்த்தி எண்திக்கிலும் நிறுத்தும் நிலவும்
தொண்டரவர்.......

என்றும்,

''வலிய பாசம் செற்ற புகழ்ச் சிறுத் தொண்டர்''

என்றும் கூறப்படும் சேக்கிழார் பாடலே அதற்குச் சான்றாகும்.

### சம்பந்தர்

நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர் தம்பதிகத்தில்

''கல்நவில் தோள் சிறுத் தொண்டன்''
''செறுவடி தோள் சிறுத் தொண்டன்''

என்று சிறுத்தொண்டரின் மறத்தொழில் திறமைகளையும்,

''பொடி நுகரும் சிறுத்தொண்டருக்கு அருள்செய்யும்
பொருட்டாக
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச்சரத்தானே.''

என்று அவரின் கோயில் திருப்பணிகளையும்,

''சீருலாம் சிறுத்தொண்டன்''

என்று அவர்தம் புகழையும் பாடுகின்றார்.

### பல்லவ மன்னன்

சிறுத்தொண்டர் திறம் குறித்து

''மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்த
வலியுடைமையினால்
எதிரிவருக்கு இவ்வுலகில் இல்லை....''

என்பதை அமைச்சர்கள் வாயிலாக அறிந்த நரசிம்மவர்மன்,


சந்தண
நங்கை.
சீராள
தேவர்.
வெண்காட்டு
நங்கை.
சிறுதொண்ட
நாயனார்.

''உம்பா் பிரான் அடியாரை உணராதே
கெட்டொழிந்தேன்,
எம்பிரான் இது பொறுக்கவேண்டும்''

என்று இறைஞ்சி, இனி

''செம்மை நெறித் திருத்தொண்டு செய்யும்''

என்று சிறுத் தொண்டருக்கு விடை தருகிறான்.

**நம்பியாண்டார் நம்பி**

சுந்தரரை அடியொற்றி அந்தாதி பாடிய நம்பி

''புலியின் அதலுடைப் புண்ணியா்க்கு இன்னமுதாத்
தனது ஓர்
ஒலியின் சதங்கைக் குதலைப்புதல்வன் உடல்
துனித்துக்
கலியின் வலிகெடுத்து ஓங்கும் புகழ்ச்சிறுத்
தொண்டன் கண்டீர்''

என்று போற்றிசைப்பார்.

**பட்டினத்து அடிகளார்**

பட்டினத்தடிகளார் தம் பதினோராம் திரு முறையில்

'நின்முதல் வழிபடத் தன்மகன் தடிந்த
தொண்டர் மனையில் உண்டல் போற்றி''

என்று ஆண்டவனுக்கே அமுதுபடைத்த அடியார் புகழைப் பாடுகிறார்.

**திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்**

இவர் தம் திருக்களிற்றுப்படியாரில் சிறுத் தொண்டர் அருஞ்செயலை வல்வினை என்று வியந்து பாடுகிறார்.

''வரங்கள்தரும் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினால் அன்று கறியாக்க - இரங்காதே
கொல்வினையே செய்யும் கொடுவினையே
யானவற்றை
வல்வினையே என்றதுதான் மற்று''

**பட்டினத்தார்**

பிற்காலப் பட்டினத்தார், செயற்கரிய செய்தார் மூவர் என்று குறிப்பிடுவதில் முதலிடம் பெறுகிறார் சிறுத்தொண்டர்.

''வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன் அல்லேன்;
மாதுசொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லேன்;
தொண்டுசெய்து
நாள்ஆறில் கண்இடந்து அப்பவல்லேன்
அல்லேன்; நானினிச்சென்று
ஆளாவது எப்படி யோ திருக்காளத்தி அப்பருக்கே''

என்பது பாடல்.

**இரட்டைப்புலவர்கள்**

இரட்டையர் தம் ஏகாம்பரநாதர் உலாவில் சிறுத்தொண்டர் செயலையும் இறைவன் அருளையும்

'.........புகழைச்
செலுத்தச் சிறுத்தொண்டர் தேவி அறுத்தாக்கி
கலத்திற் படைத்த கறியைத் - தலைகிட்ட
சுட்டியும் மாலைச் சுரி குஞ்சியும் முத்தும்
கட்டியை நல்கும் கனிவாயும் - இட்டதொரு
வாளியும் காதும் மருங்கு மலரிவடமும்
தாளிணையும் செம்பொன் சதங்கையுமாய் - மீளப்
பிறப்பித்தவர் தாம் பெரும்பிறப்பை எல்லாம்
அறுப்பிக்க வல்லவர் தாம்...''

என்று பாடுகின்றனர்.

**காளமேகப்புலவர்**

காளமேகப்புலவர் திருவருணை சோணே சரை வணங்குமுகமாக,

''சட்டியிலே பாதி அந்தச்சட்டு வத்திலேபாதி
இட்ட கலத்தில் பாதி இட்டிருக்க - திட்டமுடன்
ஆடிவந்த சோணேசர் அன்றழைத்தபோது பிள்ளை
ஓடிவந்த தெவ்வாறு உரை''

என்று பாடுகிறார்.

**பரஞ்சோதி முனிவர்**

திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவர், சிவபெருமானுக்கு மூன்றிடங்களில் அமுது படைத்த விந்தையை விவரிப்பார்.

''அன்று சிறுத்தொண்டர் இடும்பிள்ளைக் கறியமுதும்
என்றும் சுவைதெரிந்த வேடன்இட்ட ஊனும்போல்
நன்று நரையாட்டி இடுபிட்டு நயந்து அருந்தி
என்றும் அடியார்க்கு எளிவந்தாய் எந்தாயே''

என்பது பாடல்.

★★★

## பின் அட்டைப்பட விளக்கம்

மயிலை அருள்மிகு திருவள்ளுவர் திருக்கோயிலில், அருள்மிகு திருவள்ளுவர் திரக்கோயில் திருப்பணித் துவக்க விழா, திருவள்ளுவர் நூலகத் திறப்புவிழா மற்றும் திருவள்ளுவர் - வாசுகி திருமண மண்டபம் புதுப்பிக்கும் விழா ஆகிய முப்பெரும் விழா 18.9.2000 அன்ற மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., மற்றும் மயிலை சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ந.பூ. இராமஜெயம் ஆகியோர் முன்னிலையில் இவ்விழா சிறப்புற நடைபெற்றது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை தலைமையிட இணை ஆணையாளர் திருமிகு ப. தனபால், எம்.ஏ. பி.எல்., சென்னை இணை ஆணையாளர் திருமிகு இரா. சுப்பிரமணியன், பி.ஏ.பி.எல்., சென்னை உதவி ஆணையாளர் திருமிகு அ. சுப்பிரமணியம், எம்.ஏ., பி.எல்., அறங்காவலர் குழுத்தலைவர் திருமதி பரமேஸ்வரி இரத்தினவேலு, செயல் அலுவலர் திரு த. மோகனசுந்தரம் மற்றும் அறங்காவலர் பெருமக்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

**சிவப்பிரகாசர்**

கற்பனைக்கடல் சிவப்பிரகாசர் நால்வர் நான் மணிமாலையில்

''தந்தையைத் தடிந்தும் மைந்தரைக் கொன்றும்
பண்டைநாள் ஒருசிலர் தொண்டர் ஆயினர்''

என்று பாடுகிறார்.

**வள்ளலார்**

ஜீவகாருண்யம் இயற்றி-போற்றிய வள்ளலார்

''பெண்ணொரு பால்வைத்த மத்தனடி - சிறு
பிள்ளைக்கறி கொண்ட பித்தனடி...''

என்று பாடுகிறார்.

**கண்ணதாசன்**

இக்காலத் திரைப்பாட்டில் கண்ணதாசன்,

''பிள்ளையைக் கொன்றுவிட்டுப்
பெருவிருந்தாக்கி வைத்தான்
கள்ளமில் பரஞ்சோதியே..''

என்று பாடுகிறார்.

இவை போல, தமிழ்விடுதூது, திருப்புகழ், தில்லைஉலா முதலிய பலநூல்களில் சிறுத்தொண்டர் நாடகங்கள், கதைகள், இசைநூல்கள் பல உள்ளன.

**பிறமொழிகளில்**

தெலுங்கில் தப்நபக்த, சிறியாள சரிதம் முதலிய பலநூல்கள்; கன்னடத்தில் சிறுத்தொண்ட பக்தரு முதலிய நூல்கள்; வடமொழியில் சிவபக்த விலாசம், மராத்தியில் பக்தவிலாஸ் போன்ற பலநூல்கள் உருவாயின.

**பட்டிமன்றங்களில்**

தமிழ்நாட்டில் பெரியபுராணக் கூட்டம் நடை பெறுகிறது என்றால் அங்கு சிறுத்தொண்டர் இல்லாமல் இருக்காது.

**செயற்கரிய செய்தார்?:** - இயற்பகையா? கண்ணப்பரா? சிறுத்தொண்டரா?


**தியாகத்தில் சிறந்தார் :** - இடந்து அப்பினார்?
அரிந்து ஊட்டினார்?
இளமை துறந்தார்?

போன்ற தலைப்புகளில் விவாதமேடைகள் ஆண்டு தோறும் அமைகின்றன.

இவ்வாறு


ஞாலத்தில் அருஞ்செயல்புரிந்த சிறுத்தொண்டர்
காலத்தை வென்றுவாழும் நாயன்மாராக
விளங்குகிறார்.


★ ★ ★





**தீபாவளி நல்வாழ்த்துக்கள்**


''திருக்கோயில்'' வாசகர்களுக்கு
எங்கள் மனம்கனிந்த
தீபாவளி திருநாள் நல்வாழ்த்துகளைத்
தெரிவித்து மகிழ்கின்றோம்.







திருச்சி அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா 11.9.2000 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களும், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திருமிகு கா.நா. நேரு அவர்களும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.




வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,*** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.